ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

**October- December 2010**

விகிர்தி ஐப்பசி - மார்கழி 2010
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



இந்துசமயப் பேரவையின் 11ஆவது வருடத் திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவின்போது திருக்கூட்ட அடியார்கள் அபிசேகக் கும்பங்களுடன் வீதிவலம் வரும் காட்சி

# V. K. JEGAN INC.

## Custom Framing Book Depot

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும்
சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo,
திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட
படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில்
Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய
பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள்,
கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான
ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva: 416-497-5690**
**Cell 416-508-4940**

**2537 Warden Ave., Scarborough**
**(Warden & Bridel town Circle)**



# Non-Medical Insurance

வைத்திய பரிசோதனையற்ற
ஆயுட் காப்புறுதியை
பெற்றுக் கொள்ள அழையுங்கள்



## கென் கிருபா

**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
www.familyprotection.ca



உ
சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: 1948

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

கனடா மலர் 10:
இதழ் 4
விகிர்தி வருடம்
ஐப்பசி - மார்கழி
திரு. ஆண்டு -2041
ஆங்கில ஆண்டு 2010

**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்

**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651

**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org

## உள்ளடக்கம்

1. சமய அறிவு
2. எங்குமுள்ள பிள்ளையார்
3. ஆறுமுகநாவலர் தந்த .........
4. ஆதரித்து அழைத்தல்
5. சுவாமி சாந்தானந்தா சரஸ்வதி தரிசனம்
6. பிரார்த்தனை
7. திருவிளக்குப் பூசையும் அதன் மகிமையும்
8. Hinduism in a nutshell
9. Siva Lingam
10. 12ஆவது உலகச் சைவ மாநாடு
11 இந்து சமயப் பேரவைச் செய்திகள்
12 ஒரு தமிழ்நாட்டுக் காப்பியம்
13. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

# சமய அறிவு

1969ஆம் ஆண்டு யூலாய் மாதம் 20ஆம் திகதி நடந்த உலக சாதனை விஞ்ஞான ஆய்வுத்துறையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

அந்த நாள் நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனில் கால் வைத்த நாள்.

அந்த வியத்தகு தீரத்தைக் கேள்வியுற்ற ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். அவர் ஓர் இந்தியர்; இந்து மதத்தவர்.

சிவபெருமானின் தலையில் ஒருவன் காலை வைத்ததைத் தாங்கமாட்டாது அவர் தற்கொலை செய்தார் என்று செய்தி வெளியானது.

சமயத்தை எம்மவர் எந்த அளவுக்குத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அந்தச் சாமியாரும் அவரது செய்கையும் நல்ல உதாரணம்.

சிவபெருமானின் தலையிலே சந்திரன் இருக்கிறான் என்று புராணம் கூறுவது உண்மைதான். ஆனால் அவரது தலையிலே இருப்பது வானத்திலே நாம் காண்கின்ற பௌதிக சந்திரன் அல்ல; தலையிலே இருப்பவர் சந்திர தேவர். சந்திரர்களின் அதிதேவதை. ஆம்ஸ்ரோங் கால் வைத்தது புவியின் உபகோளத்தில் - பௌதிக சந்திரனில், சந்திரதேவரில் அல்ல.

தற்கொலை செய்து கொண்டவர் ஒரு துறவி; சாமியார் என்று அறிந்தவர்களால் மதிப்புடன் அழைக்கப்பட்டவர். சாமியார் என்றால் சாதாரண மக்கள் சமயத்தை நன்கு அறிந்தவர் என்று அவரைப் போற்றுவதுண்டு.

ஆனால் சாமிமார் எல்லோரும் சமயத்தை அறிந்தவரல்லர். நம்பிக்கைதான் அவர்களுக்குச் சமயம். அதற்குமேல் அவர்கள் எதையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை.

விஞ்ஞானம் மிகவே ஆட்சிசெலுத்துகின்ற இந்தக் காலத்திலே மெய்ஞ்ஞானமாகிய எமது சமயநெறியை வளர்த்துக்கொள்வதற்கு

அறிவுபூர்வமான பத்தி அவசியமாகின்றது. கண்மூடித்தனமான பத்தி தனியொருவருக்கே தக்கது. அறிவுசான்ற பத்தி தனக்கு மட்டுமன்றி பிறருக்கும் பயன்படக்கூடியது. நாயன்மார் நால்வரும் இறைவன்மீது காட்டிய பத்தி இத்தகையது. அவர்கள்வழி வளர்ந்த பத்திநெறியே நாம் பின்பற்றுகின்ற நெறி. அந்த நெறி இறைவனை அறிந்து, அவனது பெருமைகளை உணர்ந்து வாழ்த்தி வணங்குகின்ற நெறி.

எனவே சமயக் கல்வியைப் பெற்றோர்கள் வளர்க்க வேண்டும் என்றும் பிள்ளைகளுக்கு அதனைப் புகட்டும் வழிவகைகளை ஆர்வத்துடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

- வி. கந்தவனம்
ஆசிரியர்


**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

**Orthodontics Implants**

பற்களுக்கு கிளிப் போடுவதிலும் Implant பல் கட்டுவதிலும் பயிற்சி பெற்றவர்

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit:7**
**Scarborough, Ontario, M1K 5J8**
**Monday to Saturday**
Near Kennedy Subway (Rainbow Village Building)

**416-266-5161**

**MAIN SQUARE DENTAL OFFICE**

**7-2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5**
Mon, Tues, Wed, Thurs, Fri, Sat & Sun - Near Main Subway
Dr. Shan - Thusday (Morning)
Dr. Yao San (Tue, Fri & Sat)
Dr. Brian (Monday) Dr. May (Wednesday)

**416-690-0121**

# எங்குமுள்ள பிள்ளையார்

## நல்லூர்
## சந்திரசேகரப் பிள்ளையார்

இருவிழிகள் எனச்சைவம் தமிழ்வ ளர்த்த
    எங்கள்பிரான் நாவலரை ஈன்றெ டுக்கத்
தருமபதி நல்லூருக் கருள்பா லித்த
    சந்திரசே கரப்பிள்ளை தாள்கள் சேர்வார்
அருள்வெள்ளப் பொழிவினிலே ஆர்ப்ப ரிப்பார்
    அதியின்ப வாழ்க்கைதனை அனுப விப்பார்
இருளில் இடர்ப் படுவீரோ இனியும் ஐயன்
    இணையடிகள் தொழுதுய்ய எழுவீர் இன்றே. (87)

## நல்லூர்
## பண்டாரக்குளப் பிள்ளையார்

ஒன்றானார் இரண்டானார் பலவும் ஆனார்
    உயிரானார் உடலானார் உலகும் ஆனார்
இன்றானார் நேற்றானார் நாளை யானார்
    இங்கானார் அங்கானார் எங்கும் ஆனார்
நின்றாளும் ஆனைமுக நிமலன் ஆனார்
    நீர்வேணி மதிசூடி மகனும் ஆனார்
அன்றாண்ட நல்லூருக் கரசும் ஆனார்
    அவர்பண்டா ரக்குளத்துப் பிள்ளை யாரே. (88)

## அச்சுவேலி
## தீர்த்தாங்குளப் பிள்ளையார்

ஒருபோதும் ஓயாத ஓமென் கின்ற
    உயிரான ஒலியாகி ஓங்கி நிற்பார்
அருஞ்சைவப் பத்தர்வயல் உழுத வேளை
    அறிதுயிலை அகற்றியச்சு வேலி செய்த
பெரும்பேற்றி னாலுருவம் காட்டி வந்த
    பிள்ளையார் அடியவரை நாளும் பேணி
அருள்பாலித் தழகான கோயில் கொண்டார்
    அவர்கண்டீர் தீர்த்தாங்குளப் பிள்ளை யாரே. (89)

# ஆறுமுக நாவலர் தந்த சைவத் தமிழ்ச் சூழல்

மறவன்புலவு க. சச்சிதானந்தன்
( முன்னாள் ஐ. நா ஆலோசகர், எழுத்தாளர், பதிப்பாளர்)

உலகம் முழுவதும் தமிழர். 41 நாடுகளில் கணிசமான தொகையில் தமிழர். மேலும் 20 நாடுகளில் சிறு சிறு தொகைகளில். மொத்தமாக 2010 இல் 9.5 கோடித் தமிழர். இவர்களுள் 7 கோடித் தொகையினர் சைவத் தமிழர்.

கடந்த 200 ஆண்டுகளாக, தென்னிந்தியாவுக்கும் ஈழத்துக்கும் அப்பால், 14 நாடுகளில் புதிதாக 4,500 தமிழ்ச் சைவக் கோயில்கள். கடந்த 25 ஆண்டுகளில் மேலும் 20 நாடுகளில் புதிதாக, 500 தமிழ்ச் சைவக் கோயில்கள். தென்னிந்தியாவுக்கும் ஈழத்துக்கும் அப்பால், உலகெங்கும் தோராயமாக, 5,000 தமிழ்ச் சைவக் கோயில்கள்.

கடந்த 1,000 ஆண்டுகளாக, தொடர்ச்சியாக, ஆண்டுதோறும் தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்கொக்கில் அரசப் பூங்காவில் நடைபெறும் ஊஞ்சல் விழாவில் தோடுடைய செவியன் எனத் தொடங்கும் தேவாரம் ஓதுதலும் தாய்லாந்து அரசரின் முடிசூட்டு விழாவில் திருவெம்பாவை ஓதுலும் நடைபெற்றுவருகின்றன.

கடந்த 200 ஆண்டுகளாக, கிழக்கே பிஜி நாடு தொடக்கம், மேற்கே கரிபியன் தீவுக் கூட்டம் வரை சூரியன் மறையாமலே கேட்டு வருவது தேவார, திருவாசகங்களை, திருப்புகழை, காவடிச் சிந்துகளை.

இன்றோ, உலகெங்கும் 30 நாடுகளில் திருமுறைகளையும் சைவத் தமிழ்ப் பாக்களையும் பயிற்றுவிக்கும் 25,000 பாடசாலைகள். இங்கே பயிலத் தோராயமாக ஏழு இலட்சம் சைவத் தமிழ் மாணவ மாணவியர் வருகின்றனர்.

ஹவாய்த் தீவில் அமைந்துள்ள சிவன் கோயிலில் ஓதுவார் இசைக்கும் தேவார திருவாசகங்களையும் சேர்த்துக் கொண்டால், சூரியன் மறையாத தமிழ்ச் சைவச் சூழலில் பூமிப் பந்து சுழல்வதை உணரலாம்.

இவ்வாறு உலகெலாம் உணர்ந்து ஓதுவாற்கு, வேண்டுவார் வேண்டுவதை ஈயும் சிவபெருமான், உலகச் சைவத் தமிழ்ச் சூழலுக்குத் தலைவன்.

முழுமை என உண்டா? முழுமையை அடையலாமா? என்ற வினாக்களின் விடையே சிவநெறி. முழுமையானவர் சத்தியும்

சிவனும் ஆய கடவுள். முழுமையற்றது உயிர். முழுமையை நோக்கிய பயணமே பிறவிகளுக்கு ஊடான உயிர்க் கூர்மை. முழுமையை நோக்கிய உயிரின் பயணத்தைத் தடுப்பன மலங்கள். மலங்களின் தடைகளைக் கடக்க, வினைகள் பாற, புலன்களின் வேட்கையைத் தணிவிக்க, மனத்தை வழிப்படுத்த, பார்வதி உடனுறை சிவபெருமானே துணை நிற்கிறார் என்ற அறிவுசார் நிலையே சைவத் தமிழ்ச் சூழலாம்.

உலகெங்கும் சைவத் தமிழ்ச் சூழலை உருவாக்கி அருள் பெருக்கிய பெருமுயற்சிக்கு நீண்ட வரலாறுண்டு.

புன்னெறி அதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலான நன்னெறி ஒழுக, சைவ நெறிக்கு ஆட்படுத்தக் காலத்துக்கு காலம், அருளாளர் பெருமக்கள் தொண்டாற்றி வந்துள்ளனர்.

பரசமயகோளரியாகிய திருஞானசம்பந்தர், அடக்கு முறைக்குப் பணிவோம் அல்லோம் என வாழ்ந்த திருநாவுக்கரசர் போன்ற சைவத் தமிழ்ப் போராளிகளின் வழியில் 188 ஆண்டுகளுக்கு முன் (திபி 1853 மார்கழியில், 18.12.1822) யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தவர் ஆறுமுக நாவலர்.

புலமை வளம், பொருள் வளம் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். எனவே வாழ்க்கை அவருக்குப் போராட்டமாகவில்லை. ஆனால் போராட்டத்தையே வாழ்க்கையாக்குவதற்கான புறச் சூழல் ஆறுமுக நாவலருக்கு இருந்தது.

சைவத்தையும் தமிழையும் தம் இரு கண்களாகப் போற்றினார். அக்காலச் சூழலுக்கு ஏற்றவாறு சைவத் தமிழ்ச் சூழலைப் பார்த்தார். எதிர்காலத்தில் உலகம் முழுவதும் சைவத் தமிழ்ச் சூழல் அமையுமாறு வழி சமைத்தார்.

பெரிய புராணம் ஒரு கட்டுக் கதை என்றார் தமையனார் தியாகராசா. வெகுண்டெழுந்தார் ஆறுமுக நாவலர். கத்தி ஒன்றை எடுத்தார். மூத்தவர், தமையனார் என்றெல்லாம் பாராது வெட்ட முனைந்தார், இளமைப் பராய ஆறுமுக நாவலர். அதன் பின் தியாகராசருடன் முகம் கொடுக்கா விரதமிருந்தார். தியாகராசர் இறக்கும் காலை, ஆறுமுக நாவலரை அழைத்தார், நடந்ததற்கு வருந்தினார்.

ஆறுமுக நாவலரின் கொள்கைக்கு இஃது ஓர் எடுத்துக் காட்டு. சைவத் தமிழ்ச் சூழல் பெரிதா, குடும்பம் பெரிதா? சைவத் தமிழ்ச் சூழலே ஆறுமுக நாவலருக்குத் தேவையானதாகத் தெரிந்தது.

யார்? எவர்? எனப் பாரார், எந்தச் சூழல்? எந்தத் தேவை? எனப் பாரார். சைவத் தமிழ்ச் சூழலுக்குரியதை, சிவநெறி

வளர்ச்சிக்குரியதை மட்டுமே நோக்கினார் ஆறுமுக நாவலர். அவருடைய போராட்டங்களின் பின்னணி இதுவே.

ஆறுமுக நாவலருக்கு 25 வயது. யாழ்ப்பாணத்து நல்லூர் முருகன் கோயிலில் சிவாகம விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்ற போராட்டத்தைத் தொடக்குகிறார். 57 வயதில் அவர் இறக்கும் வரை அந்தப் போராட்டத்தைக் கைவிடவில்லை.

கருவறையில் முருகனின் சிலை அமைய வேண்டும். கோயிலில் உயிர்ப் பலி கொடுக்கக் கூடாது. சிவாகம விதிகளைக் கோயிலில் பின்பற்றவேண்டும். இவை போராட்டக் கரு.

உயிர்ப் பலி இன்றில்லை. முருகன் சிலை கொண்ட கருவறைக்காகக் கரூரில் இருந்து கொண்டு சென்ற கருங்கற்கற்களால் கட்டிய கட்டடம் முடிவடையவில்லை. சில ஆண்டுகள் முன்பு வரை முற்றுப்பெறாக் கோயிலாக இருந்த அக் கருவறையின் சான்றுகள் கூட இன்று நல்லூர் முருகன் கோயிலில் இல்லை.

ஆனாலும் ஆறுமுக நாவலரின் முயற்சியால் அவரது 56ஆவது வயதில் தொடங்கிய வழக்கு, அவர் இறந்து 40 ஆண்டுகளின் பின் தீர்ப்பாகி, நல்லூர் முருகன் கோயில் கணக்குகளை ஆண்டுதோறும் நீதிமன்றத்துக்குக் கொடுக்கும் நிலை வந்தது.

தேவதாசிப் பெண்களைத் தமிழ்நாட்டிலிருந்து அழைத்து வந்து ஈழத்துக் கோயில் திருவிழாக்களில் நடனமாடிக் களிக்கும் அடியார்களை ஆறுமுக நாவலர் சாடினார். அந்த வழக்கத்தை விட்டுத் திருமுறைகளைப் பாராயணம் செய்யும் வழக்கத்தை ஊக்குவித்து பெருமளவு வெற்றியும் கண்டார்.

ஆறுமுக நாவலருக்கு 41 வயது. சிவ தீட்சை பெறாத வைதிக பிராமணர்கள், கருவறைக்குள் சென்று திருமேனி தொட்டுப் பூசை செய்யலாகாது, வழிபடலாகதென்பது ஆறுமுக நாவலரின் நிலை. அந்தப் பணியை ஆதி சைவர்களான சிவாச்சாரியார்களே செய்யலாம் என்றார். சுமார்த்தர்களிடம் திருநீறு வாங்குவது பொருத்தமானதல்ல என்பது அவர் வாதம். ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் இக்கருத்துகளைப் பரப்பி வெற்றிகண்டார்.

ஆறுமுக நாவலருக்கு 47 வயது. சிதம்பரத்தில் தில்லையில் தீட்சிதர்கள் வேதவேள்விக்காக உயிர்ப்பலி கொடுக்க முயல்கின்றனர். ஆறுமுக நாவலர் ஒப்பவில்லை. அங்குள்ளவர்களை அழைக்கிறார். கண்டிக்கிறார். தீட்சிதர்களின் முயற்சி தோல்வியில். இதனால் ஆறுமுக நாவலர் மீது தீட்சிதர்கள் கோபம் கொள்கின்றனர்.

ஆறுமுக நாவலருக்கு 49 வயது. திருமுறைகளே

அருட்பாக்கள் என ஆறுமுக நாவலர் கருதினார். சைவத் தமிழ்ச் சூழலுக்குரிய அருட்பாக்கள் வேறு எதுவும் இல்லை என்றார். இராமலிங்க வள்ளலாரின் பாடல்களை திருஅருட்பாக்கள் என்றவர்களைக் கண்டித்தார். இந்த வாதம் நெடுங் காலம் தொடர்ந்தது. ஆறுமுக நாவவருக்குப் பின்னும் அவரின் மாணவர் பலர் இந்த விவாதத்தினைத் தொடர்ந்தனர்.

சைவத் தமிழ்ச் சூழலின் எழுச்சிக்கும் தொடர்ச்சிக்கும் மீள்வளர்ச்சிக்கும் மக்களிடையே அறிவு பெருகவேண்டும் என நாவலர் கருதினார். சைவத் தமிழ் நூல்களை அக்கால மக்கள் எளிதில் புரியுமாறு எழுதினார், பதிப்பித்தார். தற்காலப் பதிப்புலகின் தந்தை, தமிழ் வசன நடையின் முன்னோடி என ஆறுமுக நாவலரைப் பாராட்டுவர்.

ஆறுமுக நாவலர் காலத்தில் சைவத் தமிழ்ச் சூழலின் மிகப் பெரிய சவாலாக, கிறித்துவ மதமாற்றம் நடைபெற்று வந்தது. ஈழத் தமிழர்கள் பலர், பணத்துக்காகவும் பதவிக்காகவும் கிறித்துவ மதத்தைக் கைக்கொண்டனர்.

கிறித்துவ மதமாற்றத்துக்கு எதிராக ஆறுமுக நாவலர் நடத்திய போராட்டங்கள் பல.

சைவத் தமிழ்ச் சூழலின் பெருமைகளை விளக்கி, நூல்கள் வெளியிட்டார். கிறித்துவ மதத்தின் கொள்கைகளில் உள்ள குறைபாடுகளை விளக்கிப் பிரசாரம் செய்தார். சைவப் பாடசாலைகளை உருவாக்கினார். சைவ அமைப்புகளை வளர்த்தார். தனது நாவன்மையாலும் எழுத்து வன்மையாலும் கிறித்துவ மதமாற்றத்தைப் பெரிதும் தடுத்து நிறுத்தினார்.

இவரது போராட்டங்களில் இவருக்குத் துணையாக, இவரது மாணவர்கள் பணி புரிந்தனர். காசிவாசி செந்திநாதய்யர், சதாசிவம் பிள்ளை, பொன்னம்பலம்பிள்ளை, சி. வை. தாமோதரம்பிள்ளை, கறோல் விசுவநாதபிள்ளை என இவர் பின்னால் அணி திரண்டோரின் எண்ணிக்கை கணக்கிலடங்கா.

போராட்டங்களையே வாழ்வாகக் கொண்டு 57 ஆண்டுகள் வாழ்ந்தார். திபி 1910 கார்த்திகை மகத்தன்று (5.12.1879) சிவனடிப்பேறு எய்தினார்.

கடந்த 25 ஆண்டுகளாக ஏறத்தாழ 30 நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர், சென்ற இடமெல்லாம் சைவத் தமிழ்ச் சூழலை வளர்த்து வருகின்றனர் எனில், ஆறுமுக நாவலர் தொடக்கிவைத்த சைவ மறுமலர்ச்சிப் பணியே காரணமாகும்.

# ஆதரித்து அழைத்தல்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

திருவாசகச் செழுமறை முனிவரைப் பட்டினத்துப் பிள்ளையார் திருந்திய அன்பின் பெருந்துறைப்பிள்ளை யெனப் போற்றுகின்றார். செழுமறை முனிவர் பிரானும் தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அன்ப போற்றியென்று பேசுகிறார். தீர்ந்த அன்பு என்பதற்கு முடிந்த அன்பு எனப் பொருள்கொள்வர். நிறைந்த கனிந்த எல்லையற்ற, இனி அளவிடமுடியாத, மேலோங்கிய, முதிர்ந்த எனப் பொருள் காணலாம். இந்த அன்பே சிவமெனப் பேசப்படுகிறது. ஈரம், அன்பு, பட்சம், நேயம், காதல், நேசம், என்றும் விளக்கலாம். அன்பு கலந்த வாழ்க்கையே மேம்பட்டது; உரைத்துப் பார்க்க முடியாதது; அதை உரைக்கவோ, நிறுக்கவோ முடியாது. அன்பின் வழியது உயிர்நிலை. மனித சாதியையும் தாண்டி, தாவர சங்கமத்திலும் அன்பு ஊற்றெடுத்து ஓடுகிறது. பொருளியலை அன்பின் ஐந்திணை என்பர். என்போடியைந்த வாழ்வு அன்போடியைந்தது. அளவறுக்க வொண்ணாதது. அன்பை இனங்காண முடியாது. என்பையும் கொடுப்பது அன்பு. எனவே இறைவழிபாடு அன்பால் இயன்றது. பக்திக் கனலின் மூலவேர் அதுதான். ஆக அன்போடு கலந்த வழிபாடே உயிரோடு துவண்டு இறையை அழைக்கின்றது. அழைத்தல், கூவுதல், கூவிக்கொளல், கூப்பிடுதல், ஈடுபாடாய் இணைந்து, குழைந்து உருகி, எட்டாவேளை கதறி, கத்தி, எல்லையற்ற ஈடுபாட்டினாற் பரம் பொருளை வேறாகப் பாராமல் உள்ளம்குளிர அழைத்துத் தம் முறைப்பாட்டை முன்வைப்பதும் ஒருவித வழிபடு மார்க்கமாகும். சும்மா அழைப்பதற்கும், ஆதரித்து அழைப்பதற்கும் வித்தியாசம், வேறுபாடு நிறைய உண்டு. தெய்வ வழிபாட்டிற்கு இ∴து ஒரு மனித உத்தி எனலாம். எனவே ஆதரிப்பு, அங்கேயோர் உறவை, பற்றை, பாசத்தை வெளிக்காட்டுகிறது. அழுதால் உனைப் பெறலாமே யென்றோர் பிரயோகத்தை அம்பு போற் பாய்ச்சுகிறார். ஆடியும் பாடியும், அரற்றியும் அழுதும் பரவியும் மிக்க ஈடுபாட்டோடு எம் பெருமானை அழைத்தால் நிட்சயமாகக் குரல் கொடுப்பான் என்ற உறுதிப்பாடு வேறு இணைகிறது. ஆதரித்து என்பதற்கு விரும்பி என்றும் பொருள் கொள்வர். அகராதியிலே ஆதரவு என்பதற்கு அன்பு, உதவி, தேற்றரவு, வேட்கை, ஈடுபாடு என்று பொருள் கூறப்படுகிறது. அருட் பத்தில் பத்துப் பாவியங்களிலே

இத்தொடர் பதிவாகியுள்ளது. திரும்பத் திரும்ப 'ஆதரித்து அழைத்தால்' என (ஆல் உருபு) மூன்றாம் வேற்றுமை உருபைப் பாவிக்கின்றார். பாடல் ஆசிரியரின் இடையறாப் பக்தியுணர்வை இங்கே படம் பிடித்துக் காட்டுவது போன்ற ஓர் பார்வை எம்மையுறுத்துகிறது, எம்மை உராய்கிறது தீப்பெட்டியைப் பற்ற வைப்பது போல. ஒரு பிரயோகம் ஆயிரம் முறை சொன்னது போற் தோணுகிறது. பாராயணம் பண்ணுவோர்க்கு, ஈடுபாடாய்ப் படிப்போர்க்குத் திருவாசகம் வெற்று, விறுதாப் பாடலன்று. பன்னிரு திருமுறையில் இருந்து அதை நீக்கி விட்டால் எப்படியிருக்கும். தாஸ் மகாலில் இருந்த வைரக் கல்லை நீக்கியது போன்றமையும்.

இந்த ஆதரவு பற்றிச் சிறிது சிந்திப்போம். எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே, கொண்டாடினால் நின்றாடுவான் போன்ற பக்தி அனுபவ மொழிகள் ஏதோர் ஆசறுதியான உண்மையைச் சைவ சமயிகட்கு உணர்த்தவே எழுந்தன போற் தொனிக்கிறது. கவிமணியவர்கள் இந்தப் பாவத்தையும் தொழிற்பாட்டையும் தாய் கன்றிலே வைத்துக் காட்டுகிறார். "அம்மா வென்றழைக்குது வெள்ளைப் பசு அண்டையிலே ஓடுது கன்றுக்குட்டி" என்ற பாவம் நிறைந்த பாவனை எம்மை அந்த ஆதரித்தழைப்பிலே குறி வைக்கிறது. அன்றோ தாய்ப் பசுவின் ஆதரித்தழைக்கும் பக்குவத்திலே வாத்சல்யம் பளீச்சிடுகிறதன்றோ. இந்தத் தாய் சேய் நிகழ்வுகளை மனிதத்தாய் சேயுடன் பொருத்திச் சிறிது சிந்தித்தாலே போதும். அந்த ஆதாரம் மின்சாரம் போலப் பளிச்சிடுகிறது. இந்த ஆதரவுக்கான சுவாமிகளையும் உலுக்கி எங்களையும் ஆட்டியசைக்கிறது. இந்த அசைவு ஆதரித்து அழைத்தால் மின்னிப் பொலிந்தது அன்றே. இஃது சின்ன விடயமல்ல. இமய உச்சி ஒன்றையொன்று தங்கி நிற்பது இயற்கை. தங்கி நிற்பது ஆதாரம். மரம் எங்கே தங்கி நிற்கிறது பூமியிலே. பெற்றோரிலே பிள்ளைகள் தங்கி இருந்தனர். (அந்தக் காலம்) பிள்ளைகள் விழுது போற் தாங்க வேண்டும். இஃதும் ஒரு ஆதாரம் தான். ஏழை பேதைகள், முதியோர்கள், தாயை இழந்த பிள்ளைகள், அநாதைகள் ஆன குழந்தை குட்டிகள் போன்ற மனித கூட்ட மொன்று ஆத்தலைந்து நிற்கிறதே! அவர்களை ஆதரித்தழைத்து உதவுவதும் ஒரு காத்திரமான ஆதரிப்பு. இளைத்துப்போன ஊதியமற்ற நாதிகள், செய்யும் வகையறியாது அலைகிறார்களே, அவர்களின் அவல ஓலம் ஒரு துணையை நாடி அலைகிறதே.

ஆண்டவனிடம் அவர் கொடுக்கும் முறைப்பாடு கேட்டு அவன் வழிவிடுகிறான் என்ற நிலைப்பாடும் ஆதரித்தழைப்பதன் கருது கோள் எனவாம்.

அபலைகளின் கண்ணீர்த்துளிகளிற் கலந்து நின்று சொல்லும் ஓலங்கள் ஒருவகையான அழைப்புத்தான். தேவர்கள் நண்ணினர்க்கினியாய் ஓலம், ஞான நாயகனேயென ஓலம் இட்டார்கள். ஏன்? தீனர்களின் இந்த அழைப்புத்தான் ஆதரித் தழைப்பது. எனவே தீனதயாளுவாய் இரட்சிக்கிறான். நீங்கள் இருபதடி என்னைநோக்கி நடந்தால், நான் நாற்பதடி உங்களை நோக்கி நடக்கிறேன் என இயேசுபிரான் கூறிய வார்த்தை எம்மை யருட்டுகிறது அன்றே. குழந்தையை அரவணைக்கும் தாயைப் போல ஆண்டவன் நம் ஈனக் குரல் கேட்டு ஆதரிக்கிறான் நம்மை. ஆதரித்தல் என்றால் பேணுதல் என்றும் பொருள்படும். "தந்தை தாய் பேண்" என்பது ஔவை வாக்கு. ஆகவே குழந்தையாய்ச் சிரிக்கும் ஆண்டவனை அரவணைக்க வழி - எம் பெருமானை ஆதரித்து அழைக்க வேண்டும். அங்கேதான் ஈரப்பசை இருக்கிறது. சேக்கிழார் ஈர அன்பு எனத்தன் பெரிய புராணத்தில் பாடினார். எம் பரம் பொருள் சிவன். சிவனோடு தொடர்புடையோர் நலம். ஆண்டவனை அதிதூரத்தில் வைத்துப் பார்க்காதீர்கள். எம்முடனே பிறிவின்றி நிற்கிறான் கடவுள்.

நம் மூதாதையர் வீடுதோறும் கொட்டிலோ குடிலோ கட்டி அங்கே தம் குடும்பத் தெய்வங்களை வெகு பத்தி சிரத்தையோடு ஆதரித்து வழிபட்டனர். அது சிறு தெய்வ வழிபாடாகலாம். கூட்டி மெழுகி சாணி தெளித்து அதிகாலையிற் தம் வழிபடு தெய்வங்களை வணங்கினர். செவ்வாய் வெள்ளியில் விளக்குவைப்பர். பூசை பண்ணுவர் பொங்கல் வேள்வி செய்வர். இவ் வழிபாடு பரம்பரை பரம்பரையாய் நடைபெற்றது. இது ஒருவித ஆதரிப்பு - ஆதரிப்பது அவன் வேலை.

ஊருக்கு ஒரு பொதுக்கோயில் அமைத்துக் குல தெய்வ வழிபாடு மேற்கொண்டு தல விருட்சம், தீர்த்தக் கேணியமைத்தும் பெருவிழா எடுத்து வழிவழி இறைவழிபாடியற்றி ஆராதனை செய்தனர். இதுவும் ஆதரிப்பே. நால்வர் வந்தபின் நாடெங்கும் மகா சேத்திரங்கள் எழுந்தன. தேவாரம், திருவாசகம் பாடி இறை வழிபாடியற்றினார்கள். இன்று அந்த ஆதரித்தழைக்கும் நெறியை விடுத்து வேறு மார்க்கங்களை மேற்கொள்கிறீர்கள். பக்தி நலிகிறது. உங்கள் பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களை கைநழுவ

விட்டுவிட்டீர்கள். உங்களை நீங்களே உரைத்துப் பாருங்கள். நீங்கள் திசை மாறிய பறவைகள் ஆனீர்கள். கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்ற உண்மையைப் பாதுகாருங்கள். மணி மொழியார் ஓர் வழிகாட்டி நமக்கு. அவர் செப்பனிட்ட தூய பாதை யிலே எம்மை நெறிப்படுத்துவோம். திருவாசகத்தை ஆதரிப்போம். தொன்மை பெறுவோம். ஆண்டவனை ஆதரித்தழைப்போம். சைவம் தழைக்கச் சேவையாற்றுவோம் வாரீர்

மருளனேன் மனத்தை மயக்கறநோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவந்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர்திருப் பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

திருவாசகம் 29 - 9

இறைவன் நல்லவன். எம்மை வழிநடத்துபவன். நாமும் அவனைப்பேணுவோம். ஆதரிப்போம். மாணிக்கர் சொன்ன மணிவார்த்தையைப் பேணி வழிநடப்போம். அவனை ஆதரித்து அழைப்பது நம் வேலை. தொழும்பாளரின் கூப்பீடு உறைப்பாய மையட்டும். பலன் கைமேல்வரும். எனவே நாம் ஆதரித்து அழைப்போம். அவன் வழிவிடுவான். இது நிச்சயம். உண்மை.

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி அம்மான்
அவன் என்னை ஆட்கொண்டு அளித்திடும் ஆகில்
அவன் தனையான்
பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து
பலநாள் அழைத்தால்
இவன் எனைப் பலநாள் அழைப்பு
ஒழியான் என்று எதிர்ப்படுமே.

- அப்பர் தனித்திருவிருத்தம்

# சுவாமி சாந்தானந்தா சரஸ்வதி தரிசனம்

சு, சிவதாஸ்
முன்னாள் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர்

தமிழ் நாட்டில் சுவாமி சாந்தானந்தா என்றவுடன் எமக்கு எந்தச் சாந்தானந்தா என்ற கேள்வி எழும். விழுப்புர மாவட்டத்தில் உள்ள திருக்கோவிலூர் என்ற கிராமத்தில் அவதரித்து ரிஷிகேசம் சுவாமி சிவானந்தரின் அனுக்கிரகம் பெற்ற 'சிவா குடும்பம்' என்ற அமைப்பின் ஸ்தாபகர் சுவாமி சாந்தானந்தாவையே இங்கு நாம் குறிப்பிடுகிறோம்.

1934 ஏப்ரல் 7ஆம் நாள் பிறந்த இவருக்கு இடப்பட்ட பெயர் சந்திரசேகர் என்பதாம். சிறுவயதிலே சுவாமி ஞானானந்த கிரி அவர்களின் ஆச்சிரமத்துக்குச் சென்று தொண்டு செய்வதும் பாடுவதும் இவரது வழக்கமாயிருந்தது. தாரமும் குருவும் தலையில் எழுத்து என்பதற்கேற்ப, சுவாமி ஞானானந்தகிரி அவர்கள் சந்திரசேகரரை ரிஷிகேசத்து சுவாமி சிவானந்தாவிடம் அனுப்பி வைத்தார். வீட்டை விட்டு புறப்படு முன்னர், தன் தாயிடம் தானாக உணவு கேட்டு வாங்கிச் சாப்பிட்டுவிட்டு ஞானநிலை நோக்கிய பயணத்தை மேற்கொண்டார். ரிஷிகேசத்தில் சுவாமி சிவானந்தரின் கீழ் அமர்ந்து கழிவறைகள் கழுவுதல் முதலாக பலபல தொண்டுகள் செய்து பக்குவமாகி ஞானநூல்கள் கற்று சுவாமி சிவானந்தர் மூலமாக சந்நியாச தீட்சை பெற்று சுவாமி சாந்தானந்தா என்ற நாமமும் பெற்றார். சுவாமி சிவானந்தா மகாசமாதி அடையும்வரை அவருடன் வாழ்ந்தார்.

1971ஆம் ஆண்டு மலேசியாவை அடைந்து, கோலாலம்பூரில் சிவா குடும்பத்தை அமைத்தார். 'வழி சமயம், கொள்கை எதுவானாலும் சரி, பின்பற்றுங்கள் ஆனால் அதனை மெய்யாகவே உள்ளன்புடன் நம்பிப் பின்பற்றுங்கள். நம்பிக்கையின் புனிதத்துவம் உங்களுக்கு ஒளியூட்டி நெறிப்படுத்தி எல்லோரையும் சென்றடையும் கடவுளிடம் சேர்ப்பிக்கும்' என்று அடியார்களுக்கு எடுத்தியம்பினார். எல்லாச் சமயங்களிலும் சொல்லப்பட்ட 'கடவுளிடம் அன்பு, மக்களுக்குத் தொண்டு' என்ற போதனையையே புகட்டினார். மலேசியா செல்ல முன்னர் அவர் முதன்முறையாக வெளிநாடு சென்றார் என்றால் அது 1970இல் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயமாகும். அந்த ஆண்டு அடியேன் இரத்மலானையில் அமைந்திருக்கும் கொழும்பு இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பு பயின்று கொண்டு இருந்தேன். அந்த ஆண்டு (1970) இந்தக்

கல்லூரியின் இந்துமாமன்றத்துக்கு தலைவராக யான் இருந்தேன். சுவாமி சாந்தானந்தா கொழும்பில் வந்துள்ளதை அறிந்த கல்லூரி அதிபர் திரு. சிவபாலன், இந்துமாமன்ற சார்பில் சுவாமியை கல்லூரிக்கு ஒரு வெள்ளிக்கிழமை காலை அழைத்திருந்தார். கல்லூரியின் தியான மண்டபத்தில் பாடசாலை மாணவர்கள் சிவபுராணம் படிக்கக் கூடியிருந்த வேளையில் சுவாமி சாந்தானந்தா உரையாற்ற இருந்தார். அடியேன் தலைவர் என்ற முறையில் சுவாமிகளை அழைத்து மண்டபத்திற்கு சென்று சுவாமியை அறிமுகம் செய்து அவரைப் பேசும்படியாக அழைத்துக்கொண்டு அவரது பாதார விந்தங்களை தொட்டு வணங்கக் குனிந்தபோது சுவாமி என்னைத் தடுக்குமுகமாக என்னை கட்டிப்பிடித்து தன்னுடன் அணைத்து பின்னர் பேச ஆரம்பித்தார். மாம்பழம் போல் ஒளிவிடும் கன்னங்களும் பகபகவென ஒளிவிடும் சிவத்தப் பட்டாடைகளும் பார்ப்பதற்கோர் கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது. அவர் பேசிய பேச்சுக்களும் பாடிய பாட்டுக்களும் தேவலோகமே திரண்டு வந்தாற்போல் இருந்தது.

பாடல் மூலம் மக்களைப் எப்போதும் கவர்ந்த சுவாமி சாந்தானந்தா 1973-1974 களில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மடத்துக்கு விஜயம் செய்தார். அந்த நேரத்தில் அடியேன் அங்கே இருந்த காரணத்தால் சுவாமியின் இரு பாதங்களைத் தொட்டு வணங்கும் சந்தர்ப்பமும் ஏற்பட்டது. 1970 இல் முதன்முறையாக இலங்கைக்கு செல்லும்போது சுவாமி சிவானந்தரின் கிளையான நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் 10 நாள் உரையாற்றினார் என்பது இங்கு விசேசமாகக் குறிப்பிடத்தக்கது.

சுவாமியின் சேவாகாரியங்களை பின்வருமாறு ஒழுங்குபடுத்தலாம்.

1. 'சிவா குடும்பம்' (Shiva Family) - இது மந்திரங்கள், பாடல்கள் மூலமாக இறைவனை வழிபடும் அமைப்பாக இருக்கிறது.

2. கலைக்கோயில் (temple of Fine Arts) - இது இளைஞர்கள் மத்தியில் கலாச்சார சீரழிவைத் தடுத்து கலை மூலமாக இறைவனை வழிபடும் முறையை காட்டுகின்றது.

3. 'தொண்டுக் கோயில்' (Temple of Service) இது வைத்தியம், விழிப்புலன், மற்றும் பல் சம்பந்தப்பட்ட பாசறைகள் அமைத்து தொண்டு செய்தலை ஊக்குவிக்கின்றது.

4. லாவண்யா! என்ற அமைப்பில் கலையம்சம் பொருந்திய உடுப்புகள், பொருட்கள் விற்கப்படுகின்றன.

5. அன்னலட்சுமி உணவகம் - இதில் விரும்பிய பணத்தை காணிக்கையாகப் போட்டுவிட்டு சாப்பிடும் அமைப்பைத் காட்டுகிறது.
6. ஹம்சவாகினி விமானச்சீட:டு முகவர் - இதில் யாத்திரைக்காகச் செல்பவர்களுக்கு குறைந்த விலையில் விமானச்சீட:டு விற்பனை செய்யப்படுகிறது.
7. கலாச்சார நிகழ்ச்சிகள் - இதன் மூலம் சமய ஆன்மீக நாட்டிய நாடகங்கள், நாடகங்கள் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு விழிப்பூட்டப்படுகின்றது.

சுவாமியின் நடவடிக்கைகள் இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, பேர்த், ஐக்கிய இராச்சியம் (U.K) ஆகிய இடங்களிலும் பிற பல இடங்களிலும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. சுவாமி கோயம்புத்தூரில் 1997இல் மகாசமாதியானார். அங்கேதான் அவரது சமாதி மந்திர் அமைந்திருக்கின்றது.

---

## அமுத மொழிகள்

சைவத் தமிழ் இலக்கியங்கள் என்று போற்றப்படும் அருள் நூல்கள் பன்னிரு திருமுறைகளாகும். பரம் பொருளை முக்கரணங்களாலும் அனுபவித்து உணர்ந்த ஞானப் பெருமக்களால் இவை பாடப்பெற்றது




சிவமயம்

# பிரார்த்தனை

**ஆன்மீகவள்ளல், ஆத்மஜோதி நா. முத்தையா**

பூனைக்குட்டி கத்தியதும் அதன் தாய்ப் பூனை ஓடிவந்து அதைத் தூக்கிக் கொண்டு போகிறது. அம்மாதிரியே அடியவர் கதறினால் இறைவன் அவரைக் காப்பாற்ற ஓடிவருகிறான்.

துன்பம் நேர்கையில் இறைவனை நம்பி இருப்பதுதான் பிரார்த்தனை. அடியவருக்கு ஆறுதல் கூறுவதற்காக இறைவனுக்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பதுதான் பிரார்த்தனை. எம் உள்ளத்தை இறைவனுக்குத் திறந்து காட்டுவதால் அதிலுள்ள சுமையை குறைத்துக் கொள்வதுதான் பிரார்த்தனை. என்ன செய்வது என்று திகைத்திருக்கும்பொழுது உனக்கு எது சிறந்ததோ அதை முடிவுசெய்ய கடவுளை எதிர்நோக்கி இருப்பதுதான் பிரார்த்தனை மனஉறுதி தளரும்போதுதான் மனிதன் பிரார்த்தனை செய்யக் கற்றுக் கொள்ளுகின்றான்.

## விந்தையான நிலை

பிரார்த்தனை என்பது எதையும் கேட்பதல்ல. ஒரே மாதிரி நிலைத்த மனத்துடன் பக்தி கொண்டு இறைவனோடு தொடர்பு கொள்ளுதலே பிரார்த்தனை எனப்படும்.

பிரார்த்தனை என்பது நாம் இறைவனுக்கு அண்மையில் இருப்பதைக் குறிக்கும் மனத்தை இறைவனோடு ஒன்றுபடச் செய்வது இறைவன் இடத்தில் மனத்தை நிலைபெற்றிருக்கச் செய்வது பிரார்த்தனை. இறைவனைப்பற்றிய தியானத்தில் ஆழந்திருப்பது பிரார்த்தனை. இறைவனிடத்தில் பரிபூரண சரணாகதி அடைவது பிரார்த்தனை மனத்தையும் அகந்தையையும் அமைதியாக உருகச் செய்வது பிரார்த்தனை. தனி ஒரு உணர்வை இறைவனோடு ஒன்றுபடச் செய்வதையே பிரார்த்தனை என்று குறிக்கிறது.

ஆன்மாவை இறைவனிடம் உயர்த்தும் செயலே பிரார்த்தனை. இறைவனிடம் அன்பு செலுத்திப் போற்றுவதே பிரார்த்தனை. பிரார்த்தனை என்பது இறைவழிபாடு. இறைவனைப் புகழ்வது பிரார்த்தனை, பிரார்த்தனை என்பது இறைவன் தமக்களித்துள்ள நற்பேறுகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்துவதாகும்.

மனித உள்ளத்திலும் மனதிலும் ஆன்மாவிலும் இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் ஆன்மீக சக்தியின் குரல் அல்லது

வழிபாடுதான் பிரார்த்தனை. அது புவியீர்ப்பு சக்தி அல்லது கவர்ச்சி என்னும் ஆற்றலைப் போன்று உண்மையானது.

பிரார்த்தனை என்பது மதத்தின் சாரம் அல்லது ஆன்மா போன்றது. அதுமனித வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. பிரார்த்தனை இன்றி ஒரு மனிதன் வாழ முடியாது.

## எல்லோரும் பிரார்த்தனை செய்யலாம்

குருடன், செவிடன், நொண்டி, முடவன், மெலிந்தவன், அறிவற்றவன், இழிந்தவன் தாழ்ந்த நிலையில் உள்ளவன் ஒதுக்கப்பட்டவன், ஆகிய அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கலாம். ஏனென்றால் பிரார்த்தனை என்பது உள்ளத்துக்கும் உணர்வுக்கும் சொந்தமானது. அது உடலைப்பற்றியதல்ல.

பிரார்த்தனை செய்வதற்கு உயர்ந்த அறிவோ பேச்சாற்றலோ தேவை இல்லை. நீ பிரார்த்தனை செய்யும்போது இறைவன் உன் உள்ளத்தைத்தான் வேண்டுகின்றார். கல்வி அறிவில்லாதவன் ஆனாலும் அடக்கமுள்ள தூய்மையான ஓர் ஆன்மாவின் ஒரு சில சொற்கள் ஒரு பண்டிதர் அல்லது பேச்சாற்றல் படைத்த சொற்பொழிவாளர் ஒருவரின் அழகான சொற்களைவிட இறைவனைக் கவரும் ஆற்றல் படைத்தவை.

ஒரு குழந்தைக்கு இலக்கணமும் உச்சரிப்பும் தெரியாது. அது சில ஒலிகளை எழுப்புகிறது. ஆனால் அதன் தாய்க்குக் குழந்தை என்ன சொல்கிறது என்று விளங்குகிறது. ஆங்கிலேய அதிகாரியின் வீட்டில் உள்ள இந்திய சமையற்காரர் ஓர் ஆங்கிலப் பேராசிரியர்அல்ல. சமையல்க்காரர் எழுவாய் பயனிலை இல்லாத சொற்களைப் பேசுகிறார். ஆனால் ஆங்கிலேய அதிகாரிக்கு அது விளங்குகிறது. உள்ளத்தின் மொழி மற்றவர்களுக்கு புரிந்து கொள்ளும் ஆற்றல் இருக்கும் உள்ளத்திலேயே குடிகொண்டிருக்கும் அந்தர்யாமியான இறைவனுக்கு நாம் என்ன சொல்ல விரும்புகிறோம் என்று தெரியாதா?

நீ என்ன சொல்ல விரும்புகிறாய் என்பது அவருக்குத் தெரியும். நீ இறைவனை வழிபடும் பிரார்த்தனைகளில் தவறுகள் இருந்தாலும் நீ உச்சரிக்கும் மந்திரங்களில் தவறுகள் இருந்தாலும் நீ செயயும் பிரார்த்தனையும் உச்சரிக்கும் மந்திரமும் சிரத்தையோடு கூடியதாக இருக்கமானால் அவர் அதைக் கேட்கிறார். உன் உள்ளத்தின் மொழி அவருக்கத் தெரியும்.

## யாருடைய பிரார்த்தனை கேட்கப்படும்

பிரார்த்தனை ஒருவர் உள்ளததிலிருந்து வரவேண்டும். உதட்டளவில் இருக்ககூாது. அக்கறை இல்லாத பிரார்த்தனை வெறும் ஒசையை எழுப்பும் தாளங்களைப் போன்றது.

அக்கறையுள்ளதும் தூய்மையானதுமான உள்ளம் உடனடியாக இறைவனுக்குக் கேட்கிறது. கபடமான குறுகிய மனமுள்ள கொடிய மனிதனின் பிரார்த்தனையை இறைவன் கேட்கமாட்டான்.

உண்மையான பக்தனின் பிரார்த்தனையை எப்பொழுதும் இறைவன் கேட்கிறார். நம்பிக்கை இல்லாத ஒருவன்தான் இறைவனுக்குக் காது கேட்கவில்லை என்று சொல்லுவான். இறைவன் தன்னுடைய மக்களின் அபயக்குரலை எதிர்நோக்கி எப்பொழுதும் காத்திருக்கிறார். ஒளிவுமறைவு இல்லாமல் அவருக்கு எம் உள்ளத்தை திறந்து காட்டவேண்டும். அதற்கு உடனே பதில் கிடைக்கும்.

## பிரார்த்தனைப் பயிற்சி

உன்னுடைய மூச்சு உனக்குக் கொடுக்கப்பட்டது, இறைவனைப் பிரார்த்தனை செய்வதற்குத்தான், முழங்கால் மண்டியிட்டு அவரைப் பிரார்த்தனை செய். ஆனால் நீ எழுந்தவுடன் அதனை நிறுத்திவிடாதே. பிரார்த்தனை வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும். உன் வாழ்க்கையே ஒரு நீண்ட நெடிய பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

பிரார்த்தனையால் தீர்க்க முடியாத பிரச்சினைகளே இல்லை. பிரார்த்தனையால் போக்க முடியாத துன்பங்களே இல்லை. பிரார்த்தனையால் கடக்க முடியாத இடையூறுகளே இல்லை. பிரார்த்தனையால் வெல்ல முடியாத தீங்கே இல்லை. பிரார்த்தனை என்பது இறைவனோடு கொள்ளும் தொடர்பாகும். பிரார்த்தனை என்பது இறைவனுடைய ஆற்றலை மனிதனுடைய இரத்தத்தில் கலக்கச் செய்யும் விந்தையான சக்தியாகும். எனவே முழங்காற் படியிட்டு இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்.

# திருவிளக்குப் பூசையும் அதன் மகிமையும்

செல்வி ரவிநந்தா சிவானியா
கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி நாவலப்பிட்டி

திருவிளக்குப் பூசையும் அதன் மகிமையும் என்பதே இக்கட்டுரையின் தொனிப்பொருளாகும். தீபமானது இருளை அகற்றவதைப் போல சோதி வடிவான இறைவன் தன்னை அடைந்த ஆன்மாக்களின் ஆணவ இருளை அகற்றித் தன் மயமாக்குவான் என்பதனை விளக்குகின்றது திருவிளக்கு. படைத்தற் கடவுளான பிரம்மா இவ்வுலகை சிருட்டிக்கும்போது ஐம்பெரும் பூதங்களை ஆதாரமாகக் கொண்டே படைத்தார். ஆகாயம், மண், நீர், காற்று, நெருப்பு என்ற பஞ்சபூதங்களும் தோன்றி, உலகம் தோன்றக் காரணமாய் இருந்தது. இதன் வழியிலே மெய், வாய், கண், மூக்கு, செவி, என்ற ஐம்புலன்களும் தோன்றி மானிடப் பிறவி தோற்றுவிக்கப்பட்டது. மனிதன் ஐம்புலன்களினால் ஆட்சி செய்யப்படுவதால் அஞ்ஞானியாக வாழ்கின்றான். என்றைக்கும் இம்மனிதன் ஐம்புலன்களை அடக்கி வாழ முயற்சிக்கும் போதே பேரறிவுபாதையை நோக்கி செல்ல முடியும். இவ்வழியை அடையவே எமக்கு முன்னர் வாழ்ந்த பெரியோர் வீடுகளில் தீபம் ஏற்றி வழிபடும் ஓர் வழக்கத்தை கொண்டு வந்துள்ளனர்.

எங்கே இருள் இருக்கின்றதோ! அங்கே தான் எமக்கு ஒளி தேவைப்படுகிறது. எமது மனம் அமைதியின்றி இருக்கும் சந்தர்ப்பத்தில் இருளில் இருப்பது போன்று இருக்கும். இவ்வுணர்வைத் தவிர்க்க வேண்டுமானால் மகிழ்ச்சி என்ற ஒளியை ஏற்றி வைக்க வேண்டும். எம் உள்ளம் எல்லாம் ஒளியைப் பரப்ப வேண்டும் இதனையே அப்பர் சுவாமிகள் 'இல்லக விளக்கது இருள் கெடுப்பது' என்று பாடியுள்ளார். விளக்கு மங்கலத்தின் அடையாளம் என்றபடியால் எத்தனையோ அடியார்கள் தீபத்தைப் பற்றிப் பாடியுள்ளனர். மேலும் எம் பெரியார்கள் தரும் விளக்கம் ஜோதி வடிவில் இறைவன் உள்ளான் என்பதே ஆகும். தீபத்தை கூர்ந்து கவனித்தால் சோதியானது லிங்கத்தின் வடிவில் தோன்றுவதைக் காணலாம். உலகமானது இறுதியில் சோதியாகிய இறைவனிடம் தான் சரணடைகிறது. தூய சோதியை போல மனதில் நற்குணங்கள் இருந்தால் இறை அருளை சுலபமாக அடையலாம் என்பதை இது தெளிவாக உணர்த்துகிறது.

மனிதனுக்கு துன்பஞ் செய்கின்றவை பல. அவற்றுள் இருள் ஒன்று. இருளில் அட்டையா? கள்வனா? காலில் பட்டது சந்தனமா? சாணமா? அரவமா? கயிறா என்று அறிந்து கொள்ள முடியாது. இருளில் ஒரு வேலையும் செய்ய முடியாது. நடமாடவும் முடியாது. இரவில் நமது வீடுகளில் மின்சார விளக்குகள் அணைந்துவிட்டால் அப்படியே அனைவரும் அசைவற்று நிற்க நேர்கின்றது. விளக்கு நமக்கு எத்தனை வண்ணமாக உதவி செய்கின்றது என்பதை நாம் அது இல்லாதபோது தான் உணர முடியும். தாய் எம்மை எப்படி எப்படியெல்லாம் வளர்க்கின்றாள் என்பதனை தாய் இல்லாதபோது தானே உணர முடிகின்றது.

பொருள்களை விளக்குகின்ற விளக்குகள் நான்கு என கூறப்படுகின்றது. சூரியன், சந்திரன், அக்கினி, ஓசை என்ற நான்கும் பகலில் பொருள்களை விளக்குவது கதிர், இரவிலே பொருள்களை விளக்குவது மதியும் கனலும், இந்த மூன்றும் இல்லாதபோது ஓசை நமக்கு உதவுகிறது. வீட்டிலேயுங்கூட இருளில் அசைவற்று திகைக்கின்ற போது அங்கு யாராவது பேசினால் அந்த குரலோசையைக் கொண்டு இன்னார் என்று விளங்கிக கொள்கின்றோம் அல்லவா? எனவே சொல்லே ஒரு விளக்கு ஆகும்.

சொல்லே விளக்காகத் தோன்றியருளிய ஒரு வரலாறும் உண்டு. நாராயண மூர்த்தியை மனமொழி மெய்களால் வழிபட்டு வாழ்கின்றவர்களாக விளங்கிய ஆழ்வார்கள் மூவர்கள். இவர்கள் முதலாழ்வார்கள் எனப்படுவார்கள்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்ற நாமங்களை உடையவர்கள். நடுநாட்டில் திருக்கோவலூர் என்ற ஒரு திருத்தலம் உண்டு. காரி முதலிய மன்னர்கள் இருந்து அரசு புரிந்த திருநகரம். அத்தலத்திலே எழுந்தருளியுள்ள திருமாலைச் சேவிக்கும் பொருட்டு பொய்கையாழ்வார் சென்றார். அத்திருக்கோயிலிலே நெடுநேரம் இறைவனை வணங்கிவிட்டு ஒரு சிறு இடத்தில் சென்று படுத்து உறங்கிவிட்டார். நடு இரவு, குளிர்காலம், சிறு தூறல், வாடை வீசி உயிர்களை நடுக்கிக் கொண்டிருந்தது. பூதத்தாழ்வார் என்ற பெரியவர் அங்கு வந்து மெல்ல ஒதுங்கினார். படுத்திருந்த பொய்கையாழ்வார் பளிச்சென்று எழுந்து இந்த இடம் ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் ஆகும் என்று கூறி அவரை அருகில் இருக்கச் செய்து, தானும் இருந்தார். சிறிது நேரத்திற் பின்பு அங்கு பேயாழ்வார் வந்தார்.

அமர்ந்திருந்த இருவரும் உடனே எழுந்து இங்கு ஒருவர் படுக்கலாம் இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்று கூறி நின்று கொண்டார்கள்

அச்சிறு இடத்தில் மூவரும் நெருங்கி நின்றார்கள் ஒரே அமைதி, சிறிது நேரத்திற்குப் பின் கன்னங்கரேல் என்ற ஒருவர் மொழு மொழு என்ற உடம்புடன் வந்து அவர்களை நெருங்கிக்கொண்டு உட்புகுந்தார். அந்த இடம் மிக நெருக்கமான சிறு இடம். ஒருவர்மட்டும் படுக்கவும், இருவர் மட்டும் இருக்கவும், மூவர் மட்டும் நிற்கவும் முடியும். நான்காவது முறையாக இப்போது ஒரு பேர்வழி வந்து நுழைந்து நெருக்கத் தொடங்கினார். இதனால் மூவரும் திக்குமுக்காடி விட்டார்கள். மூச்சு திணறியது. ஐயா! நீர் யார்? என்று கேட்டார்கள். பதில் இல்லை. ஐயா தங்களை யார் என்று அறிய விரும்புகின்றோம்.' ஒரே அமைதி மௌனம் நிலவியது.

விளக்கில்லாமல் எப்படி அவரை இன்னார்என்று அறியமுடியும். உடனே பொய்கையாழ்வார் மொழி விளக்கு ஏற்றுகின்றார். அது சிறு விளக்கா? உலகில் உள்ள எல்லா விளக்குகட்கும் பெரிய விளக்கு ஐந்து கண்டங்கட்கும் ஒளிதரக் கூடிய அத்தனைப் பெரிய விளக்கு. அந்த விளக்குக்கு நெய் ஒருபடி அல்லது இருபடி விட்டாற் போதுமா? இந்த பூமியே அகல், கடலே நெய், மேருகிரியே திரி, சூரியனே விளக்கு என்றார். அதன் பின்னர் 'வையந் தகரியா வார்க்கடலே நெய்யாக' என்று தொடங்கும் பாடலை பாடினார் பொய்கையாழ்வார். அடுத்தபடி, பூதத்தாழ்வார் ஒரு விளக்கு ஏற்றுவாராயினர் அதற்கு அன்பே அகல், ஆர்வமே நெய், எண்ணமே திரி, ஞானமே விளக்கு எனக் கூறி 'அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார்.

இவர்கள் இருவரும் பாடிய பின் ஒரு சோதி விளக்கு தோன்றியது. அவ்வொளியிலே தம்மை நெருங்கியது யார் என்று மூவரும் பார்த்தார்கள். அவர் திருவுருவம் நன்கு தெரிகிறது. உடனே பாடுகின்றார் பேயாழ்வார் 'திரு கண்டேன் பொன்மேனி கண்டேன்' எனும் பாடலை. இறைவனை யார் கண்டவர்? என்று சிலர் கேட்கிறார்கள் கண்டேன் கண்டேன் என்று கூறுகின்றார் பேயாழ்வார் ஆ! ஆ! என்ன அழகு! எங்களை நெருங்கியது எம்பெருமானே! 'திரு மார்பில் திகழ்கின்ற திருமகளைக் கண்டேன். அழகிய திருமேனியைக் கண்டேன் ' விளங்குகின்ற கதிரவன்

போன்ற அழகிய வடிவத்தைக் கண்டேன் போரில் திகழ்கின்ற அழகிய சக்ராயுதத்தைக் கண்டேன்.

மற்றொரு கையில் அன்புள்ள பாஞ்சஜன்யம் என்ற சங்கையும் கண்டேன் கடல் வண்ணனும் எம் கடவுள் பால் இன்று இத்தனையுங் கண்டேன்' என்கின்றார். எனவே இதனை மொழிவிளக்கு எனவுணர்க.

அகில உலகங்களுக்கும் விளக்காக நின்று எல்லாவற்றையும் விளக்குகின்றவர் சிவபெருமான். அதனால் அவரை விளக்கென்றே கூறுகின்றார் மாணிக்கவாசகர்.

"உடம்பெனும் மனை அகத்து உள்ளமே தகளியாக
மடம்படு உணர்நெய்யட்டிஉயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளைகாதை கழலடி காணலாமே!"

என திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியுள்ளார்.

உடம்பு என்பது ஒரு வீடு. மனம் அங்கு பாத்திரம், அதில் உணர்வாகிய நெய்யை ஊற்றி, உயிரெனும் திரியை இட்டு, மூச்சு எனும் காற்றை நிறுத்தி அறிவு எனும் சுடரை ஏற்றி அன்பினால் தூண்டிக் கொண்டிருக்க வேண்டும். இடைவிடாமல் விளக்கை தூண்டிக் கொண்டிருந்தால் ஆணவமாகிய நான் எனக்கு என்ற மாய இருள் அகலும். இறைவன் என்னும் சோதியின் தரிசனம் கிடைக்கும். இதுவே தீபதரிசனத்தின் உண்மைத் தத்துவம் இதுவாகும். தீபத்தைப் பற்றி மேலும் எம் பெரியார்கள் தரும் விளக்கம் சோதியானது இறைவன். தீபம் ஏற்றும்போது அதில் தோன்றும் சோதியானது தூய்மை எனும் உண்மையின் வடிவமான இறைவனை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

இறைவனை வழிபடும் முறைகளிலேயே திருவிளக்கு வழிபாடு தான் சிறந்தது. திருவிளக்கு வழிபாடு என்றால் என்ன? திருவிளக்கு வழிபாடு இந்து சமயத்தில் உன்னதமான வழிபாடாகும். உலகெலாம் நிறைந்து விளங்கும் இறைவனை இறைவியை நம் இல்லத்தில் எழுந்தருளச் செய்யத் திருவிளக்கு வழிபாடு துணைபுரியும். வேதரிஷிகள் ஓமத் தீ வளர்த்து இறைவனை வழிபட்ட மரபைத் தழுவி வந்ததே திருவிளக்கு வழிபாடு. வீடு என்று சொன்னால் அங்கு விளக்கு எரிய வேண்டும். நாம் வாழும் பிரபஞ்சம் பஞ்சபூதங்களால் ஆனது. நம்முடைய உடற் கூடு ஐம்பொறிகளால் இயக்கம் பெறுவது. நமது கை, கால்களிலும் ஐந்தைந்துவிரல்கள் அமையப் பெற்றிருக்கின்றன. அன்பு, மன உறுதி, நிதானம்,

சமயோசிதம், சகிப்புத்தன்மை இவை ஐந்தும் தாயமார்களுக்கு இருக்க வேண்டிய உன்னதமான பண்புகள் என்று நம் முன்னோர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

எனவே நம் முன்னோர் மானுட வாழ்வில் ஐம்பொறி களையும் தம் வசப்படுத்தி, ஒளிபெறச் செய்ய வேண்டும் என்ற கருத்தைவிளக்கவே ஐந்து முகமுடைய குத்துவிளக்கை உருவகித்து உவந்திருக்கிறார்கள். இருளை போக்க ஒளியேற்று வதோடு, மன இருளை அகற்ற உள்ள ஒளியை ஏற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடே திருவிளக்கு ஏற்றுவது பகலிலும் விளக்கேற்றி வழிபாடு செய்யும் பழக்கம் ஏற்பட்டது. இந்து சமயத்தில் விளக்கேற்றாத வழிபாடு இல்லை. நல்ல காரியமானாலும், நல்ல காரியம் அல்லாத காரியமானாலும் திருவிளக்கு ஏற்றியாக வேண்டும் என்ற நியதி ஏற்படுத்தப்பட்டது. சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே எனறு மாணிக்கவாசகரும், ஒளிவளர் விளக்கே உவப்பில்லா ஒன்றே எனத் திருவிசைப்பாவும், விளக்கினை ஏற்றி வெளியே அறமின், விளக்கின் முன்னே வேதனை மாறும் என்று திருமந்திரமும் வையகம் தகளியாய் வார்கடலே நெய்யாக, ஏற்றி செந்தமிழ் மாலை பாடி இடராழி நீங்குகவே என்று பொய்கையாழ்வாரும் ஞான விளக்கேற்றி போற்றி வழிபட்டு வழி காட்டியிருக்கிறார்கள். திருத்தொண்டர்களில் நமி நந்தியடிகளும், கணம் புல்லரும், கலிய நாயனாரும் திருக்கோயிலில் திருவிளக்கு ஏற்றியே முக்தி பெற்றிருக்கிறார்கள்.

வேதாரண்யம் வேதபுரிஸ்வரர் திருக்கோயிலில் விளக்கு சற்ற மங்கலாக எரிந்து கொண்டிருந்தபொழுது விளக்கில் இருக்கும் நெய்யை உண்ணுவதற்காக சென்ற எலி தனது மூக்கினால் திரியை அப்பால் நகர்த்தியதும் தீபம் சுடர் விட்டு எரிந்ததாம், எலியின் செயல் எப்படியிருந்தபோதும் தீபம் சுடர்விட்டு எரியச் செய்த கைங்கரியத்திற்காக அந்த எலியை இறைவன அடுத்த பிறவியில் மகாபலி சக்கரவர்த்தியாகப் பிறக்கச் செய்தார் என்று அப்பர் சுவாமிகள் திருக்குறுந் தொகை பதிகத்தில் எட்டாம் திருப்பாட்டில் தெரிவிக்கின்றார்.

“நிறை, மறைக் காடுதன்னில் நீண்டெரி தீபந்தன்னை
கறை நிறத்து எலி தன்மூக்கு சுட்டிட கணன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும் நீண்டவான் உலகம் எல்லாம்
குறைவறக் கொடுப்பார் பாலும் குறுக்கை வீரட்டனாரே”

கிராமங்களிலும், நகரங்களிலும், அன்றாடம் கோயிலுக்குச் சென்றுதிருவிளக்கு ஏற்றுவிப்பவர்களைக் காணலாம். கோயிலில்

விளக்கேற்றி வைப்பதினால் கோடி புண்ணியம் கிடைக்கும் என்பது நம்மவர் நம்பிக்கை. மாலை நேரங்களில் வாசல் தெளித்துக் கோலமிட்டு குத்துவிளக்கேற்றி மகாலட்சுமியை இல்லத்திற்கு எழுந்தருளச் செய்து வீட்டிற்குள் குத்துவிளக்கை எடுத்துச் சென்று பாடித்துதித்து கற்பூரம் காட்டினால் லக்சுமி அந்த இல்லத்தில் நித்தியவாசம் செய்வாள். இது கிரக லக்சுமி பூஜை எனப்படுகிறது. ஆலயங்களில் பலர் ஒன்றாகச் சேர்ந்து குத்துவிளக்கு பூஜை செய்வது பிரசித்தி பெற்று வருகிறது.

திருவிளக்கு பூசையில் ஸ்ரீலலிதா சகஸ்ரநாம அர்ச்சனை, ஸ்ரீ லஷ்மி அஷ்டோத்திரம் திருமுறைகளில் இருந்து தொகுக்கப்பெற்ற போற்றித்திருஅகவல், ஆகியவைகளால் துதிக்கப்பெற்று, குங்குமம், அட்சதைகளால் அர்ச்சிக்கப்பட்டு வருகிறது. ஆலயங்களில் நடைபெறும் குத்துவிளக்கு பூஜை உன்னதமானது. பலர் கூடி ஒரே மனதுடன் பூசைபுரியம்போது தேவியின் இன்னருள் கிட்டுவது சுலபம். தாமே அர்ச்சித்துப் பழக குத்துவிளக்கு பூசை நல்ல பயிற்சியைத் தருகிறது. ஆலயத்தில் வீற்றிருக்கும் அம்பிகையை அவரவர் இல்லத்திற்கு எழுந்தருளச் செய்ய இதைவிட வேறு உபாயம் இல்லை. தாய்மார்கள் ஒன்றுகூடிச் செய்யும் குத்துவிளக்குப் பூஜை ஒரு வேள்வி செய்வதற்கு ஒப்பாகும். உன்னதமான குத்துவிளக்கு பூஜையை முறைப்படி செய்வதன் மூலம் சிறந்த பலனை பெற முடியும்.

இத்தகைய சிறப்பு பெற்ற தீபங்கள் பல மகிமைகளை உள்ளடக்கி இருப்பது சிறப்பே. அதாவது தீபம் ஏற்றும் திசை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பலன்கள் கூறப்படுகின்றது. கிழக்கு நோக்கித் தீபம் ஏற்றவதால் துன்பம் ஒழிந்து, கிரகமும் பீடையும் ஒழியும். மேற்கு நோக்கி ஏற்றுவதால் கடன் தொல்லை, சனி பீடை, கிரகதோசம், பங்காளிப் பகை நீங்கும். வடக்கில் ஏற்றுவதால் திரண்ட செல்வம், மங்களம், திருமணம், கல்வி போன்ற சர்வமங்களமும் உண்டாகும். தெற்கு பக்கம் தீபம் ஏற்றுதல் கூடாது என்றும் சாஸ்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. தீபமானது காலை 3 மணி முதல் 5 மணி வரை ஏற்றுவதால் சர்வ மங்களம் உண்டாகும் என்றும் மாலை நேரம் குடும்ப சுகம், புத்திர சுகங்களைத்தரும் எனவும், நல்ல கணவர், வேலை வேண்டுவோருக்கு கிடைக்கும் என்றும், மகாலட்சுமிக்கு ஏற்றது எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் நாம் தீபம் ஏற்றும் பொழுது எந்தெந்த எண்ணைய் எந்த தெய்வங்களுக்கு உரியது என்பதை கவனிக்க வேண்டியது

அவசியமாகும். அதாவது நெய் மகாலட்சுமிக்குரியது எனவும், நல்லெண்ணெய் நாராயண மூர்த்திக்குரியதாகவும், தேங்கா யெண்ணெய், கணபதிக்குரியதாகவும், இலுப்பெண்ணெய் தேவதை களுக்குரியதாகவும், ஆமணக்கு எண்ணெய் நல்லது நடக்கவும் என்றும் நூல்கள் இயம்புகின்றன. இந்த எண்ணெய்களை கலந்து 45 நாள் பூசித்தால் தேவியின் அருள் கிடைக்கும். மூன்று எண்ணெய்களை கலந்து ஊற்றுவது தெய்வத்துக்கு உகந்தது. செல்வம் உண்டாகும். இவ்வெண்ணெய் நெய் தீபத்திற்கு போடுவதால் பல பலன்கள் நம்மை நாடி வருவது உண்மை. நெய்யானது மிகச் சிறந்ததும், சகல விதமான சுகத்தையும் தரும்.

நல்லெண்ணெய் பகை விலக்கும், விளக்கெண்ணெய் புகழ், பந்த சுகங்கள் கிடைக்கும் எனவும், கடலெண்ணெய் ஊற்றினால் தொல்லைகள் உண்டாகும் எனக் கூறுகின்றனர்.

திருவிளக்கு பூசையின் போது எத்தனை முகம் ஏற்றுகின்றோமோ அதைப்பொறுத்து அத்தனை விதமான பலன்கள் கிடைக்கிறது. ஒரு முகம் ஏற்றுவது மந்திரபலன். இரு முகம் ஏற்றுவது குடும்ப ஒற்றுமையை பெருக்கும். மூன்று முகம் ஏற்றுவது புத்திரசுகம் தரும். நான்கு முகம் ஏற்றுவது பசு, பூமி இவற்றைத் தரும். ஐந்து முகம் ஏற்றுவது செல்வத்தைத் தரும்.

திருவிளக்கானது மிருகத்தன்மையை அடக்கி ஒடுக்கி மனிதனுடைய காம, குரோத தீய எண்ணங்களை ஒழித்து அன்பு, தியாகம்,சேவை என்ற நற்குணங்களை கூட்டிச் சாத்வீக குணமாக மாற்றும்பொழுது இறைவனுடைய ஒளி சீவாத்மாவை ஒளிவித்து, பஞ்ச இந்திரியங்கள் மூலமாக பிரமாத்ம சொரூபம் ஒளிர்விடும். அப்படிப்பட்ட ஒருமனிதன் இறைவனுடைய சன்னிதானத்தில் அமர்வதற்கு அதிகாரியாகின்றான். சமயத்தின் இலட்சியமும், யோக ஞான மார்க்கங்களின் இலட்சியமும் இதுவேயாகும். மனிதா நீ ஒரு குத்து விளக்கு, தூங்காதே எழுந்திரு. விளக்கு விளக்கு இதுவே குத்துவிளக்கின் தாற்பரியம். கிருஷ்ணபக்தையான மீராபாயும் இதே கருத்தை கூறுகிறாள். நம் இல்லத்தில் தினமும் பூசை அறையில் காலைமாலைகளில் திருவிளக்கேற்றி வழிபட வேண்டும். அகல், எண்ணெய், திரி, சுடர் ஆகிய நான்கும் விளக்காகிறது. அதுபோல் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் பெறுவது வாழ்க்கையின் பயன்களாகும். அவற்றை சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு வழிகளில் எய்தலாம். கலப்படமில்லாத தூய்மையாக்கப்பட்ட பசுநெய், நல்லெண்ணெய்,

புங்க எண்ணெய், விளக்கெண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்கள் பஞ்சதீபம் என்றழைக்கப்படும்.

எமக்கு ஒளியை ஏற்றத் தேவையானது விளக்கு, நெய், திரி, தீப்பெட்டி இவற்றில் ஒன்று இல்லாவிட்டாலும் ஒளி வராது. இல்லாவிட்டாலும் ஒளி வராது. எனவே திரியும் அவ்வாறு அமைய வேண்டும் என்பது அவசியமாகும். பஞ்சு திரியிடுவது மிக நல்லது. தாமரை நூலால் தீபம் போடுவதால் தீவினை அகன்று செல்வத்தை நிலைக்கச் செய்யும். வாழை நூலால் திரியிட்டால் குழந்தைப் பாக்கியம், தெய்வக் குற்றம், குடும்பச் சாபமும் நீங்கும். வெள்ளருக்கு பட்டாடையைத திரியாகப் செய்து தீபம போட்டால் பெருத்த செல்வம் சேரும். பேய் பிடித்தவர்களுக்கு தொல்லை நீங்கும். மஞ்சள் நிறத்திரி அம்மனின் அருள்கிடைத்து வியாதி குணமாகும்.

ஒரு திரியில் விளக்கு ஏற்றுவதனால் கிழக்கு முகமாக எரிய வேண்டும். சாயங்கால வேளையில் விளக்கேற்றி மகாலட்சுமியை வழிபட்டால் வேலை கிடைக்கும். நல்ல கணவர் வேண்டுவோர் எண்ணம் நிறைவேறும். குடும்ப சுகம் புத்திரசுகம் கிட்டும். செவ்வாய், வெள்ளி, அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம் கார்த்திகை நட்சத்திரம் ஆகிய நாட்களில் திருக்கோயில்களில் குத்துவிளக்கு பூசை செய்வது நல்ல பலன்களைத் தரும். நாள்தோறும் திருவிளக்கு வழிபாடு செய்து வரலாம். 108 நாட்களில் வீட்டில் மங்கள காரியம் நடக்கும்.

வீடு பொலிவு அடைவது நல்ல மகளிரால் தான். மனம் கொண்டு அவர்கள் ஏற்றும் தீபம் பல நன்மைகளைச் செய்யும். மண் விளக்கு அல்லது வெள்ளி, பஞ்சலோகம் போன்றதே பூசைக்கு மிக ஏற்றது. ஐந்து முக விளக்குகள் மிகச் சிறந்தன.

எனவே இறையருளை தீபத்தில் ஆவாஹணம் செய்து அருள் சக்தியின் பேரருளை பெற்றுய்வோமாக!

---

## அமுத மொழிகள்

இறைவனின் புகழை முற்றுமுழுதாக உணர்த்தி நிற்பன பன்னிரு திருமுறைகள்.

சிவபெருமானின் திருவடியை சேரப் பெற்றோமென்ற தெய்வீக உணர்வை ஊட்டி நிற்பவை. திருமுறைகள்.

சைவ சமயத்தில் பிறந்த நாங்கள் சிவனுக்கே மீளா அடிமைகளாக எழுதப்பட்டவர்கள்.

- சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

# Hinduism in a nutshell

Kumar Punithavel

For any philosophy that can be put in a nut shell, the best place will be a nut. However in this day and age of Mc Donald culture one has to be brief as possible to keep the interest of the reader. I thought it would be prudent I give the basics of the mother of all religions in a few words so that one could understand the veiled philosophy of it. With many deities and varied festivals one is very confused.

Unlike many of the later religion Hindu religion has evolved from grass roots and many saints and sages have contributed their experience towards the evolution of the religion.

Hindus at the lowest level like other religion do believe there is a God sitting above and controlling the universe. However at a higher level a Hindu believe there is only one Supreme Being and for want of a better word is called Brahman. This being permeates all animate and inanimate. We, like all that we see and feel are alike born by and from this one Supreme Being called Brahman.

This being infinity and pervades everything it is difficult to perceive. Hence every Hindu begins his spiritual journey by praying to a personal God, Gods or Goddess or Goddesses. These are what referred to as deities. We Hindus have a deity for creation, protection, destruction, wealth, valour and education and many others. Each individual's personal God or Goddess is a symbol of his/her noble ideal.

In the above stage there is bound to be many schools of thoughts and numerous rituals, scriptures, fasts, feasts, and festivals. All these people are good people seeking the ultimate truth. It is the beginning, and a Hindu believes that a person in his spiritual journey goes from lower truth to higher truth. With the help and guidance of a personal God they lead a good life while seeking the ultimate truth. They love their chosen deity and pray to it and even try bribing

him for favours! At this level of worship they do not conceive the concept of Brahman.

But scriptures like *Bagavat Geeta* and *Upanisha* urges the followers to seek further to find the answer to the fundamental questions like who am I? Why is all this suffering? What is the way out of this cycle of birth and death? It must be observed very few; in fact very few have this search. It is much easier to believe in a personal deity and lead a good life than seeking the answer to the core questions.

At the next level they start contemplation. Some challenge the existence of God Himself, and others try to find the answer as to who am I? When this search begins slowly but surely the person will realize he and God are one and therefore he pursues to find who this Brahman is. His search makes him to ponder deep into the scriptures, looks for a Guru and follow the teaching of the *Rishi's* and modern Guru's. At this level they are still student even at best.

Many of us like to say God is infinity but we also like to say there is a place for an independent soul. Many of us like to believe God will help us to gain the wealth we wish. God in this case becomes the comfort zone. We also like to have a separate God who can exonerate all our sins.

Yet, there are some who will rise up to the next level of worship. They will either become silent or sing the praise of one God or many Gods. But ultimately desire solitude and become wandering monk. These persons will have realized the true meaning of 'Thou Art That' and everything is Brahman. They will realize they are waves and Brahman is the ocean. With that realization they will realize they are indeed the ocean. In this realization of truth there is no more a birth or death. And this realization is bliss. Talking of Hinduism the whole philosophy of the religion can be boiled down to four sentences or punch lines called *Maha Vakiyas* meaning great sentences. These are one sentence taken from each Veda the holy scripture of ancient. Don't say 'wow how come for a religion with so many Gods and Goddesses together with many rituals, fasts feasts and festivals to boiled down to four sentences

must be phenomenal'. To understand it better let's take each sentence one by one and see how it is relevant. Please remember these were revealed by sages lived more than five thousand years and it still hold good.

1. ***Aham Bramasmi*** meaning 'I am Brahman'. Literally the final truth is the Brahman or God and self are the same. From this one should understand ones inmost consciousness is the same as that of the supreme divine. From this statement one should infer our own self is the true divinity and that it is the presence of the absolute within our heart and entire universe.
2. ***Ayam Atms Brahma*** meaning 'the self is Brahman'. Here too the soul is identified with the absolute. Not only is our self the divine, but it is the same self in all beings. It is the absolute truth.
3. ***Tat tvam asi*** means 'that thou art'. It just says what ever we see or think about we are that. One should remember not only I become that but you too become that. We are that ultimate I and thou in all. The consciousness in the other is also the divine.
4. ***Parajnanam Brahma*** 'Intelligence is Brahma' is this statement. From this statement one can infer an important knowledge. If self is Brahman and now we realise Brahman is supreme intelligence then it is present within us. And has the power to take us back to the divine. Our innermost intelligence is that supreme intelligence through which we can merge into absolute.

Once a person is well ingrained with this fact he dissolves inseparably in Brahman and becomes a wandering hermit called *'Sniyasi '*. When a person wants to be initiated into *sanyasa* he is taught these four principal mantras or Mahavakyas.

Based on the above fundamentals the whole philosophy of mother of all religion is developed. There is room for everyone and every thought. For a Hindu everyone is divine.

# SIVA LINGAM

**By Dr. R. Lambotharan MD**
www.knowingourroots.org
Knowingourroots@hotmail.com

இலிங்கம தாவது யாரும் அறியார்
இலிங்கம தாவது எண்டிசை எல்லாம்
இலிங்கம தாவது எண்ணெண் கலையும்
இலிங்கம தாக எடுத்தது உலகே

No one knows what the Linga is
Linga is in all eight directions
Linga is all sixty four arts (and sciences)
It is as Linga the world emerged
- -Thiru Manthiram Song -1712

**Nine forms and five cosmic functions:**
Siva Lingam is the top most perfect form of the formless God in Saivam. Tformless, nameless Being acts in nine different forms out of His grace for usas out lined in the Tamil Saiva Siddhanda tradition.

'The Being takes the Nine different forms' - Siva Jnana Siddhiyar song 164
These forms are
**1. Sivam 2. Sakthi 3. Natham 4. Bindhu 5. Sathasiva 6. Maheswara 7. Rudra 8. Vishnu and 9. Brahma**

சிவம்சத்தி நாதம் விந்து
சதாசிவன் திகழும் ஈசன்
உவந்துஅரு ளுருத்தி ரன்தான்
மால்அயன் ஒன்றின் ஒன்றாப்
பவம்தரும் அருவ நால்இங்கு
உருவநால் உபயம் ஒன்றாம்
நவந்தரு பேதம் ஏக
நாதனே நடிப்பன் என்பர். -சிவஞானசித்தியார் பாடல் 164

Among these nine, the formless aspects (அருவம்)of the being are

1. **Sivam**
2. **Sakthi**
3. **Naatham;** which is from **Sivam** and
4. **Bindhu;** which is from **Sakthi**.

These are dual aspects and expressions of the one and the same Being.
The fifth form **Sathasiva** is the perfect combination of these two dual asof the Being in union. This is represented as Siva Lingam. The union of the dual aspects of the Being is there for the five operations of

1. Creation
2. Sustenance
3. Dissolution
4. Obscuration and bestowing
5. Grace.

These five operations happens in three different levels of
1. Cosmic
2. Spiritual and
3. Mystic planes.

At the moment of the **final dissolution** (மகா சங்காரம்) of the whole universe, the dual aspects ceases, Sakthi converges within the Sivam as the single entity. The current cosmology says this as the **point of singularity.** Before the next cycle of creation, begins the dual aspects of the Being as Sivam anSakthi. Until that time is the resting period for the souls. This is the unique function of **obscuration** as outlined in Saivam.

இறுதியாங் காலந் தன்னில் ஒருவனே இருவ ருந்தம்
உறுதியின் நின்றா ரென்னின் இறுதிதான் உணாடாகாதாம்
அறுதியில் அரனே எல்லாம் அழித்தலால் அவனால் இன்னும்

பெறதும்நாம் ஆக்க நோக்கம் பேரதி கரணத்தாலே
-சிவஞானசித்தியார் பாடல் 55

At the moment of the final dissolution of the universe there is only One
If both of them are firm in their existence, then there wouldn't be an End,
At last everything is Haran, as He is everlasting after dissolving all;
We get everything back with His great operations (of creation, sustenance, dissolution, obscuration and Bestowing grace). -Siva Jnana Siddhiyaar Song -55

The ancient sayings of 'Sivam is non operational without Sakthi' (சக்தி இல்லாமல் சிவம் இயங்காது) and ' Do nothing like Sivan' (ஸஸசிவனே என்று சும்மா இரு") have deep philosophical and practical meaning and truth in them.

Sivam and Sakthi are the two aspects or expressions of the one and the same God. They are inseparable. This is the explication of andro-gynaeic (Arthta Naareswara ), half male half female form of God in Saivam. Sivam is the potential; Sakthi is the kinetic; Sivam is the wisdom; Sakthi is the grace

"He is One; with (His) grace two' - Thiru Manthiram Song-01
ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள் - திருமந்திரம் பாடல் 01

"Our Lord is inseparable from Sakthi Who bestows Sivahood for the souls" - Thiru Arud Payan -2
தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான் - திருவருட்பயன் -2

Emergence of the existing dual aspects of the Being is the beginning of the universe. The current cosmology says in reverse as

there is no existence of duality before the cataclysmic explosion of the Big Bang. So this union of Sivam and Sakthi as the cause of the all causes and the origin of the cosmos and life is seen as **Siva Lingam**. This is symbolic but real representation of the Being. This is the form of formless in between form and formlesss. This is the first form we can visualize, perceive and understand from the formless Being.

The motion of any particle in this whole universe is either circular or vertical. All other movements are the combination of these two motions and there is no other movement possible. The circular base as **aavudaiyaar** represents **Sakthi.** The vertical pillar penetrating this circular base is Lingam representing **Sivam.** This combined unitary form of the **Sivam** and **Sakthi** in union is depicted in **Siva Lingam** as the circular base **AAVUDAIYAAR** is penetrated by the vertical pillar of LINGAM. This is the dual aspects of the Being in union. This is the force of the genesis. This is the force of the sustenance of the universe. This is the force of recreation and sexuality of alliving beings. This is the cause of the all causes.

---

**ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்**

| | |
|---|---|
| காத்திகேசு இரத்தினம் ஆசிரியர் நினைவாக (2007) | $200.00 |
| திருமதி சின்னராசா இராசமலர் (2008) | $100.00 |
| திரு. கனகசபை கந்தையா (2009 ஏப்ரல் - டிசம்பர்) | $450.00 |
| திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர் (2009) | $100.00 |
| திரு. இராசையா மகிந்தன் (2009) | $50.00 |
| அமரர் இளையதம்பி கார்த்திகேசு நினைவாக (2009) | $100.00 |
| திரு. கனகசபை கந்தையா (2010 மார்ச், யூன், செப்ரெம்பர்) | $450.00 |
| அமரர் சின்னத்துரை சசிகாந்தன் நினைவாக (2010) | $200.00 |

**ஆத்மஜோதி பத்திரிகைக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416-724-6240**

# 12ஆவது உலகச் சைவ மாநாடு

கடந்த இதழ் தொடர்ச்சி

### சுற்றுலா

பெப்ரவரி 8 ம் திகதி திங்கட்கிழமை வெளிநாட்டிலிருந்து வந்த பேராளர்களுக்கு சுற்றுலா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இது டாக்டர்கள் கபாலிமூர்த்தி தம்பதியினரின் முயற்சியாகும். காலை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்டு முதலில் நாம் சோழப்பேரரசின் இராசராசசோழன் மகன் இராசேந்திர சோழனால் தோற்றுவிக்கப்பட்ட கங்கை கொண்டசோழேச்சரம் என்ற அழகிய பெரும் கோயிலை அடைந்தோம்.

### கங்கை கொண்ட சோழபுரம்

வெண்மேகங்களைக் கிழித்துக் கொண்டு விண்ணைமுட்டி நிற்கும் இதன் விமானம் கங்கை கொண்ட சோழனின் காலத்தில் (வடக்கே கங்கை நதிவரை) பெற்ற அழியாத வெற்றியின் நினைவுச் சின்னமாகும். சிதைவுறாது ஆழமாக வேரூன்றி நிற்கும் கல்லால விருட்சமாகும். இது தஞ்சையில் இராசராசன் கட்டிய பெருங்கோயிலைப் போலவே அமைக்கப்பட்டது. ஆனால் சற்று உயரம் குறைந்தது. எனினும் கட்டிட நுணுக்கத்தில் மிகச் சிறந்தது. இக் கோயில்க் கருவறை, அர்த்தமண்டபம், இடைநாழி, மணிமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம், நந்திமேடை, சிங்கமுகக்கிணறு, அம்மன் சந்நிதி, திருச்சுற்றுமதில் என்பனவற்றைக் கொண்டுள்ளது. சண்டிகேசுரர் ஆலயம் உட்பட வடகைலாயம், தென்கைலாயம், அம்மன்கோவில், கணபதி கோயிலும் சிறுகோயில்களாக உள்ளன.

### காசிமடம் - திருப்பனந்தாள்

இங்கிருந்து நாம் திருப்பனந்தாள் காசித்திருமடத்தைச் சென்றடைந்தோம். பிரபந்த வேந்தர் காசிவாசி குமரகுருபர சுவாமிகள் காசியில் கங்கைக்கரையில் கேதாரநாதர் கோயிலுக்கு அருகிலே குமாரசாமி மடத்தை நிறுவினார். இவருக்குப் பின் அவரது சீடபரம்பரையில் 1720ல் திருப்பனந்தாளில் காசிமடம் நிறுவப்பெற்றது. அதன் பணிகள் தமிழ்நாட்டில் மட்டுமின்றி

காசியிலும் நடைபெறுகின்றன. காசிமடத்தின் 19 ஆவது அதிபர் சாமிநாத சுவாமிகளால் தான் முதன் முதலில் திருவாசகத்தை அச்சிட்டு வெளியிடப்பெற்றது. திருப்பனந்தாள் காசிமடத்தின அதிபர்கள் பல அறக்கட்டளைகளை நிறுவியுள்ளார்கள். சாமிநாதசுவாமிகள் காலத்திலே இந்தப்பணி ஆரம்பமாகிவிட்டது. தமிழ்க் கல்வியை வளர்க்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு தமிழ்ப் பரிசு ரூபாய் ஆயிரம் என அறிவித்து முதல்வராகத் தேறும் மாணவர்களுக்கு பரிசாக அளித்தார்கள். சைவநூல்கள் மட்டுமல்ல கம்பராமாயணம், சீறாப்புராணம், இலக்கிய நூல்கள், அகராதிகள், வேதாந்த நூல்கள் உட்பட பல அரிய நூல்களை வெளியிட்டு வருகிறார்கள்.

1960 இல் இளவரசாக நியமனம் பெற்று 1972 ம் ஆண்டுமுதல் அருளாட்சிபுரிபவர் கயிலைமாமுனிவர் சீர்வளர்சீர் காசிவாசி குருமகா சந்நிதானம் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள். பாடல் பெற்ற சிவத்தலங்களில் 274 இல் 272 தலங்களைத் தரிசித்துள்ளார். ஈழத்தில் உள்ள இருதலங்களையும் தரிசிக்க ஆவலாக இருக்கிறார். தருமபுர ஆதீனத்தின் அடியவர் திருக்கூட்டத்தில் ஒருவராகிய ஸ்ரீமத் சுந்தர மூர்த்தி தம்பிரான் சுவாமிகள் திருப்பனந்தாள் காசிமடத்தின் இளைய அதிபராக அண்மையில் நியமனம் செய்யப்பெற்றுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலும் சைவசமய தோத்திர சாத்திர சொற்பொழிவாற்றும் திறமும் திருமுறைப் பாடல்களை பண்ணுடன் பாடும் வல்லமையும் பெற்றவர். வெளிநாடுகளுக்குச் சென்று சமயப் பணியாற்றியுள்ளார். மடத்திலே எல்லோருக்கும் தேனீர் வழங்கப்பட்டது. மடாதிபதி அடியார்களின் கேள்விகளுக்கு விளக்கங்கள் அளித்தார். இந்த வருடம் ஏன் மகா சிவராத்திரி இரு தினங்களில் வந்திருப்பதாகக் கேட்கப்பட்ட பொழுது தமது மடமும் திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்களும் மார்ச் 13 ம் திகதி என்றே முடிவு செய்ததாகவும் சில ஆலயங்களில் பெப்ரவரி மாதத்தில் அனுட்டிக்கப்படுவதாகவும், அது அவர்களின் மரபின்படி, பஞ்சாங்கப்படி அமையலாம் என்றும் இரு தினங்களிலும் மகா சிவராத்திரியை நாம் அனுட்டிக்கலாம் என்றும் தெளிவு படுத்தினார்.

## தருமபுர ஆதீனம்

அடுத்ததாக நாம் தருமபுர ஆதீனத்திற்குச் சென்றோம். தமிழ் நாட்டிலுள்ள சைவ ஆதீனங்களில திருவாவடுதுறை ஆதீனமும் தருமபுர ஆதீனமும் பெரிய ஆதீனங்கள். திருவாவடுதுறை ஆதீனம் முதலில் தோன்றியது. திருவாவடுதுறை புலமையாற் சிறந்தது.

பாடம் சொல்லும் இடமாக விளங்கியது. தருமபுரம் தவத்தால் உயர்ந்தது.

கயிலாய பரம்பரை மெய்கண்டார் சந்தானத்தில் உமாபதிசிவம் வரை எல்லா ஆதீனங்களுக்கும் பொது. உமாபதி சிவாச்சாரியாரின் மாணாக்கர் மச்சுச்செட்டியார் என்னும் அருள்நமச்சிவாயரின் மாணாக்கர் சித்தர் சிவப்பிரகாசர். அவர் மாணாக்கர் நமசிவாய மூர்த்திகளே திருவாவடுதுறை ஆதீன நிறுவனர்.

அருள்நமச்சிவாயரின் மற்றொரு மாணாக்கர் காழிக் கங்கை மெய்கண்டார். இவரது மாணாக்க பரம்பரையில் வரும் குருஞானசம்பந்தரால் தருமபுர ஆதீனம் நிறுவப்பெற்றது. யமதர்மராசன் வழிபட்டுப் பேறு பெற்றதால் ஆதீனம் அமைந்துள்ள இடத்திற்கு தருமபுரம் என்ற பெயர் ஏற்பட்டது. ஆதீனத்திற்கு அருகேயுள்ள கோயில்களுக்குச் சென்று தருமபுரீசுவரரையும் அபயாம்பிகையையும் வணங்கினோம். அத்துடன் குருஞானசம்பந்தர் கட்டிய ஞானபுரீசுவரர் கோயிலும் உள்ளது. அதுவே குருஞானசம்பந்தரின் ஜீவசமாதிக் கோயிலுமாகும். கோயில்களின் தரிசனங்ளின் பின்பு மிகச் சிறப்பாக எல்லோருக்கும் அன்னம்பாலிக்கப் பெற்றது. அதன் பின்பு ஆதீனத்திலிருக்கும் சொக்கலிங்கப் பெருமானைத் தரிசித்து 26ம் பட்டம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை விழுந்து வணங்கி மண்டபத்தில் அமர்ந்து அவரின் அருளுரையைச் செவிமடுத்தோம்.

எமது உயிர் தந்தையிடமிருந்து வந்ததாகவும் உடம்பு தாயிடம் பெற்றதாகவும் அருளுரையில் கூறினார். தேவார திருவாசகங்கள் பாடும் பொழுது பண்ணுடன் சீர்பிரிக்காது ஓத வேண்டியது பற்றியும் விளக்கினார்.

## திருவாவடுதுறை ஆதீனம்

அதன் பின்பு நாம் திருவாவடுதுறை ஆதீனத்தை வந்தடைந்து முதலில் அங்கிருந்த புத்தகசாலைக்குச் சென்றோம். பின்னர் அதனை ஒட்டினாற் போலவுள்ள திருவாவடுதுறைக் கோயிலுக்கும் திருமூலர் சந்நிதிக்கும் சென்று வழிபட்டோம். அடுத்து எல்லோருக்கும் சிற்றுண்டியும் தேநீரும் வழங்கப்பெற்றது. கோமுத்தீஸ்வரர், திருமூலர், திருமாளிகைத்தேவர், நமச்சிவாய


மூர்த்திகள் சந்நிதிகள் கொண்ட சிறப்புடையது திருவாவடுதுறை ஆதீனம். பின் இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் ஆற்றிய பூசையிலும் மற்ற சந்நிதியில் சிவாச்சாரியார் செய்த பூசைகளிலும் பங்கு கொண்டு மண்டபத்திற்குள்ளே சென்று குருமுதல்வரை வணங்கிப் பிரசாதம் பெற்றோம். இலங்கையில் இருந்து வந்த அன்பர்கள் அங்கு உள்ள அவல நிலைமையை எடுத்துக் கூறி பொருளுதவி தரும்படி விண்ணப்பித்தார்கள். தமது ஆதீனத்தால் இலங்கை மக்களுக்குக் கொடுக்கப்படும் சில பணிகளையும் மேலும் செய்யக்கூடிய உதவிகளையும் ஆதீனத்தலைவர் எடுத்துக் கூறினார். திருவாவடுதுறை ஆதீனகர்த்தா ஆற்றுகின்ற சில பணிகளில் ஒன்று 'மெய்கண்டார்' திங்களிதழ் தொடங்கியது. அடுத்தது சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் 1992 ம் ஆண்டு தொடங்கியது. நூற்றுக் கணக்கான கிறீஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் பயிற்சி பெறுகிறார்கள். கடல் கடந்து பயணம் செய்து குருமகாசந்நிதானம் மலேசியா, இலங்கை சென்று வந்துள்ளார். நூல்கள் பலவற்றை வெளியிடுகின்றார். பலருக்கும் பட்டம், பரிசு, பாராட்டு, விருது வழங்குகின்றார்.


முற்றும்.


**FASHION FLORIST INC.**

**பாஷன் பூக்களஞ்சியம்**

**பாபுவின் கைவண்ணத்தில்**







**416-754-8282**

**4400 Sheppard Ave. East, Unit 5**

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்


## திருமுறை விழா 2010

இந்துசமயப் பேரவை நடத்தும் திருமுறை விழா 2010 மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் 12-09-2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை நடைபெற்றது. விழாவிற்கு பேரவையின் தலைவர் திரு. வி. கந்தவனம் அவர்கள் தலைமை தாங்கினார்.

பேரவையின் திருக்கூட்டத்தினரால் திருமுறை வழிபாடு நடத்தப்பெற்றது. திருமுறை அடியார்களினால் பன்னிருதிருமுறை களைச் சுமந்து வீதிவலம் கொண்டு வரப்பட்டு விழா மேடையில் வைத்தபின் விழா ஆரம்பமாகியது. சேக்கிழாராக திரு கனகசபை கந்தையா அவாக்ள் உருவகப்படுத்தப்பட்டார்.

யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. நா. சுப்பிரமணியன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். சங்கீதபூசணம் பராசக்தி விநாயகதேவராசா அவர்களின் பண்ணிசைநிகழ்ச்சியும் இடம்பெற்றது. திருமுறைப் போட்டியில் பரிசுபெற்ற மாணவர்கள் மேற்படி விழாவில் திருமுறை ஓதினார்கள்.


மாலை நிகழ்ச்சியாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திருமதி கலைச் செல்வி சின்னையா, புலவர் ஈழத்துச் சிவானந்தன், பேரவையின் செயலாளர் சிவமுத்துலிங்கம் ஆகியோரின் சொற்பொழிவுகள் நடைபெற்றது. டாக்டர். லம்போதரனின் மாணவர்களும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். நாட்டிய வித்தகி கௌரி பாபுவின் மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.



2010 திருமுறை விழாவில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் கௌரவம் பெறுகின்றார்



திருமுறை போட்டியில் பங்குபற்றிய சிறுவனுக்குப் பரிசளிக்கப்படுகிறது



திருக்கூட்ட அடியார் திரு. க. கந்தையா சேக்கிழார் கோலம் பூண்கின்றார்



வித்துவான் வேந்தனாரின் புதல்வி திருமதி கலைச்செல்வி சின்னையா அவர்கள் உரையாற்றுகின்றார்







திருமுறை விழா 2010ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற சிறார்களில் சிலர்.

சைவத்தமிழ் வளர்ச்சிக்கு தன் நாவன்மையினாலும் பேச்சாற்றலாலும் எழுத்தாற்றலாலும் தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றும் புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவாக்ள் கௌரவிக்கப்பட்டார்.

திருமுறைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு வழமைபோல முருகன் புத்தகசாலை அதிபர் தார்மீக வள்ளல் திரு. க. மகேசன் தம்பதிகள் பரிசில்களை வழங்கினர். பேச்சுப் போட்டி எழுத்துப் பரீட்சை ஆகியவற்றில் பங்கு பற்றியவர்களுக்கு

யாழ். பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலைச்செல்வி சின்னையா அவர்கள் பரிசில்களை வழங்கினார். முதற் பரிசு பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது.

## பன்னிரு திருமுறைப் பூர்த்தி விழா


பேரவையின் தாபகர் ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி நா. முத்தையாவின் நினைவாக 11வது ஆண்டாக பன்னிரு திருமுறை முற்றோதல் மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த ஐந்து மாதமாக நடைபெற்றது. திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு 27-11-2010 சனிக்கிழமை மேற்படி ஆலயத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை விழா நடைபெற்றது. விழாவிற்கு பேரவையின் தலைவர் திரு. வி. கந்தவனம் அவர்கள் தலைமை தாங்கினார். உபபொருளாளர் திரு. க. கந்தையா அவர்களின் தேவாரபாராயணத்துடன் விழா ஆரம்பமாகியது. வரவேற்புரையை திரு. செ. சோமசுந்தரம் (பேரவையின் பொருளாளர்) நிகழ்த்தினார்.



திருமுறை பூர்த்தி விழாவில் திருக்கூட்ட அடியார்கள் திருமுறைகளைச் சுமந்து வீதிவலம் வரும் காட்சி.

ஆத்மீக வள்ளல் திரு. நா. முத்தையா அவாக்ள் எழுதிய இந்தோனேசியாவில் இரண்டு வருடம் என்ற நூல் வெளியீடு செய்யப்பட்டது. வெளியீட்டுரையை பேராசிரியர் கலாநிதி இ.

பாலசுந்தரம் அவர்கள் நிகழ்த்தினார். டாக்டர் இ. லம்போதரன் அவர்கள் திருமுறையை பற்றிய சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பண்ணிசை ஆசிரியை திருமதி நவராஜகுலம் முத்துக்குமாரசுவாமியின் மாணவர்கள் பண்ணிசை பாடினார்கள்.



திருமுறை முற்றோதலுக்கு ஒழுங்காக வரவு தந்தமைக்காக கேடயம் பெற்ற திருக்கூட்ட அடியார்களுடன் விழாவுக்கு வரவுதந்த பேராளர்களில் சிலர்



திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசுவாமி அவர்களின் மாணவர்கள் பண்ணிசை பாடுகின்றார்கள்.

பன்னிருதிருமுறை முற்றோதிய திருக்கூட்டத்தினருக்கு வழமைபோல திரு. க. மகேசன் தம்பதிகள் புத்தகப் பரிசில்களை வழங்கினர். உபசெயலாளர் திரு. இ. லோகேஸ்வரன் கூறிய நன்றியுரையுடனும் உபதலைவர் க. வித்தியானந்தன் அவர்களின் தேவார

பாராயணத்துடன் விழா இனிது நிறைவேறியது.



மேற்படி விழாவில் இன்னொரு நிகழ்ச்சியாக ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளின் 15து ஆண்டு நினைவு விழா நடத்தப்பட்டது. நினைவுப் பேருரையை பேரவையின் செயலாளரும் நினைவு விழா நாயகனின் சீடருமாகிய சிவமுத்துலிங்கம் நிகழ்த்தினார்.

## அமரத்துவச் செய்தி

இந்துசமயப் பேரவைத் தொண்டர் திரு செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்கள் 29-10-2010 அன்று கனடா ரொறன்ரோ



மாநகரில் அமரத்துவம் அடைந்தார். உயர்ந்த நற்குணங்களை உடைய சைவப்பெரியார் மார்க்கண்டு அவர்கள் இந்து சமயப் பேரவையின் ஆயுட்கால உறுப்பினராவார். பேரவையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியதுடன் அரும் பெரும் தொண்டுகளையும் செய்தவர். சைவமும் தமிழும் தமிழ் பண்பாடும் கலாச்சாரமும் கனடாவில் நிலைக்க வேண்டுமென்பது பெரியாரின் ஆவலாகும். பேரவை செயல்படுத்திய பல பணிகளுக்கு உந்துசக்தியாக இருந்தவர்.

அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பேரவையின் அங்கத்தவர்களும் திருக்கூட்டத்தினரும் நிர்வாகிகளும் பிரார்த்திக்கின்றனர்.

## கந்தசஷ்டி திருவிழா

மேருபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் 09-11-2010 செவ்வாய்க்கிழமை கந்தசஷ்டி திருவிழா பேரவையின் திருக்கூட்டத்தினரால் பக்தி பூர்வமாக நடத்தப்பட்டது.

---

## அமுத மொழிகள்

பன்னிரு திருமுறைகளை ஓதுவதனால் எமக்கு மன உறுதி பிறக்கின்றது. இந்த உறுதியை ஓரளவு பெற்றவர்கள் அன்றும் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். சைவ பெருமக்கள் திருமுறைகளை மதித்து வரவேற்று ஓதி உணரவேண்டும் என்பதே எனது பெருவிருப்பமாகும்.

- சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

# கச்சியப்பர் கந்தபுராணம்
# ஒரு தமிழ்நாட்டுக் காப்பியம்

கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள்

ஈழநாட்டிலே அதுவும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலே கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியன பண்டைக் காலந்தொட்டு கோயில்களிலும் மடாலயங்களிலும் ஆண்டுதோறும் படிக்கப்பெற்று வருகின்றன. புராணங்கள் அச்சிடப்படாத காலத்தில் அவற்றைப் பனையோலையில் எழுதிப் படித்து வந்தனர். அப்படி எழுதப்பெற்ற ஏட்டுச் சுவடிகள் பல இன்னும் யாழ்ப்பாணக் கோயில்களிற் காணப்படுகின்றன. இப்பொழுதும் சில கோயில்களிற் பூசையில் வைப்பதற்கெனப் புராணங்களை, சிறப்பாக கந்தபுராணத்தை, ஏட்டில் எழுதுவிக்கின்றனர். இப்படி ஏட்டிற் புராணங்களை எழுதக்கூடியவர்கள் ஒரு சிலர் இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றனர்.

புராணங்களைப் படிக்கும்பொழுது அவதானிக்க வேண்டிய விதிகளை ஆறுமுகநாவலரவர்கள் தாம் அச்சிட்ட கந்தபுராணத்தில் “சிவபுராண படன விதி” என்னுந் தலைப்பில் எழுதியுள்ளார். அதில், புராணத்தை வாசிப்போரும் பொருள் சொல்வோரும் அவதானிக்க வேண்டியவற்றைப் பின்வருமாறு கூறுகின்றார்: “புராணம் வாசிப்பவர் சபையார் யாவரும் கேட்கும் பொருட்டுத் தெளிவுபெற வாசித்தல் வேண்டும். வாசிக்கும் காலத்துக்கும் எடுத்துக்கொண்ட விஷயத்தினது குணத்துக்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல்வேண்டும். எச்சுதியில் எவ் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படல் வேண்டும். இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையாவிடங்களில் விரிவாகவும் பொருள் சொல்ல வேண்டும்

மேற்கூறியவற்றிலிருந்து ஈழநாட்டிலே புராணபடனம் வேறெங்குங் காணமுடியாத முறையில், ஓர் அருங்கலையாக வளர்க்கப்பட்டு வந்துள்ளதென்பது புலப்படுகிறது. புராணபடலத்தில் ஈடுபடுவோருக்குச் சிறந்த தமிழ் அறிவும், சமய சாத்திர ஞானமும், சங்கீதப் பயிற்சியும் இருத்தல் அவசியம். இக்காலக் கல்வி முறை பரவமுன் யாழ்ப்பாணத்திற் கற்றோரென்பவர் புராணங்களை வாசிக்கவும் பொருள் சொல்லவும், தெரிந்தவரெனக் கருதப்பட்டனர். இக்காலத்தில் மேடைப் பிரசங்கங்கள் செய்ய வல்லாரும், பத்திரிகை

க்குக் கட்டுரைகள் எழுத வல்லாரும் எப்படிக் கற்றவர்களாக மதிக்கப்படுகின்றனரோ, அதே போல அக்காலத்தில் புராண படனத்திற் பங்குபற்றத் தக்கவர் மதிக்கப் பெற்றனர்.

புராணபடனம் நடைபெறுமிடம் கற்றோரவையாக மிளிரும். சில வேளைகளிற் சபையோர் பொருள் சொல்வோரை இடைமறித்து அவர்கள் சொல்லும் பொருள் பொருந்தாமை பற்றியோ அல்லது அவர் சொல்லும் பொருளுக்கு ஆதாரங்கள் கோரியோ கேள்விகள் எழுப்புவர். இவற்றுக்கு விடையறிந்த பின்னரே புராண படனந் தொடர்ந்து நடைபெறும். கந்தபுராண அரங்கேற்றம் நடந்தபொழுது கச்சியப்பரை, சபையிலிருந்த ஒரு புலவர், "திகழ் + தசக்கரம்" எவ்வாறு 'திகடசக்கரம்' ஆயிற்றென்று கேட்டதாகவும், அதற்கு அவர்கள் வீரசோழியத்திலிருந்து ஆதாரங் காட்டி விடையிறுத்ததாகவும் அவர்கள் சரித்திரத்திலிருந்து அறிகிறோம்.

## கந்தபுராணச் சிறப்பு

கந்தபுராணம், புராணத்துக்குரிய இலக்கணங்களும், காப்பியத்துக்குரிய இலக்கணங்களும் ஒருங்கே கொண்டிருப்ப தனாலேயே, அது 'புராண நன்னாயம்' என்றும் 'அதிமதுர அதியற்புத சுத்தத் செந்தமிழ்க் காப்பியம்' என்றும் கூறப்படுகிறது.

மேலுங் கலைக்களஞ்சியத்தில் இப்புராணம் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகிறது: 'இந்த நூல் கம்பராமாயணம் போல் தமிழ் நாட்டிலும் அதற்கு மேலாக இலங்கையிலும் விரும்பிப் படிக்கப்பட்டு வருகிறது. இதன் கதைப் போக்கும், பாட்டின் இன்பமும் எல்லோர் மனதையும் கவரும்.

கந்தப்புராணச் செய்யுள்கள் திராட்சாபாகமென்பர். திராட்சைப் பழங்களை எப்படிப் பிரயாசமில்லாமல் வாயிற் போட்டுச் சுவைத்து விழுங்கலாமோ, அதே போன்று கந்தபுராணச் செய்யுள்களை இலகுவிற் படித்தனுபவிக்கலாமென்பர்.

பன்மொழிப் புலவர் மீனாட்சிசுந்தரனார் கந்தபுராணம் சைவர்களால், சிறப்பாக யாழ்ப்பாணத்துச் சைவர்களால், விரும்பிப் படிக்கப்படும் நூலென்று கூறியுள்ளார். சைவர்கள் இந்நூலை விரும்பிப் படிப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. சைவசமய உண்மைகள் இந்நூலிற் கூறப்படுவதுபோல் தெளிவாகவும், விரிவாகவும் வேறு நூலில்களிற் கூறப்படுவதில்லை. மேலுங் கந்தபுராணத்தை முறையாகப் படித்தால் இகபர சித்திகளை நிச்சயம் பெறலாம். இது பற்றிக் கச்சியப்பர் நூற்பயனிற் கூறுவது

பினவருமாறு:

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற்று இனிது மேவீச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந்தன்னைக் காதலித் தோதுவோரே.

நாவலர் அவர்களும் இதையே வற்புறுத்திப் பின்வருமாறு கூறுகின்றார்கள்:

"இக் கந்தபுராணத்தை விதிப்படி மெய்யன்போடு நியமமாகக் கேட்பவர்கள், நோய் நீக்கம், செல்வம், புத்திர பாக்கியம், சத்துரு ஜயம், இராசவசியம் முதலிய பயன்களைத் தாம் தாம் வேண்டியவாறே பெறுவார்கள். இது நெடுங்காலம் பலராலும் அனுபவத்தினால் நிச்சயித்துணரப்பட்ட விஷயம். இது சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்''

ஸ்காந்தமும் கந்தபுராணமும்

வடமொழி ஸ்காந்தம், சனத்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங்கிதை, சங்கர சங்கிதை, சூர சங்கிதை என்னும் ஆறு சங்கிதைகளைக் கொண்டது. இவற்றுள் சங்கர சங்கிதை, பன்னிரண்டு காண்டங்களைச் கொண்டது. இச் சங்கர சங்கிதையின் முதற் காண்டம் சிவரகஸ்ய காண்டம். இச் சிவ ரகஸ்ய காண்டம், சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம், உபதேச காண்டமென ஏழு காண்டங்களைக் கொண்டது. இதன் முதல் ஆறு காண்டங்களின் மொழிபெயர்ப்பே கச்சியப்பர் கந்தபுராணம் என்பர். ஏழாவது காண்டத்தைக் கோனேரியப்ப முதலியார் தமிழில் மொழிபெயர்த்தனரென்பர்.

ஆனால், ஸ்காந்தத்தின் எப்பகுதியும் இப்பொழுது முழு உருவத்திற் காணப்படவில்லை. இது விஷயமாக முருக வழிபாட்டைப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சி செய்த சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் தாம் எழுதியுள்ள முருகன் அல்லது கந்தன் வழிபாடு என்னும் நூலிற் பின்வருமாறு கூறுகிறார்:'ஓர் இலட்சம் கிரந்தங்களைக் கொண்டதாகக் கருதப்படும் வடமொழிக் கந்தபுராணத்தை இப்பொழுது முழு உருவத்திற் காணமுடியாது. இதன் சில பகுதிகள் சங்கிதைகளாகவும் காண்ட்ங்களாகவும் மகாத்மியங்களாகவும் இந்தியாவிற் பல பகுதிகளிலுங்

காணப்படுகின்றன.

வடநாட்டில் வழங்கும் ஸ்காந்தத்துக்கும், தென்னாட்டில் வழங்கும் ஸ்காந்தத்துக்கும் அதிக வித்தியாசங்கள் உண்டு. முன்னையதை உத்தர ஸ்காந்தமென்றும் பின்னையதை தட்சிண ஸ்காந்தமென்றும் கூறுவர். இதில் எது மகாபுராணம், எது உபபுராணம் என்பது பற்றி ஒரு காலத்தில் ஒரு பெரும் விவாதம் நடைபெற்றதாகத் தெரிகிறது. உத்தர ஸ்காந்தத்தில் முருகனது வரலாற்றைக் கூறும் பகுதி மிகவும் குறைவாகும். அதில் தீர்த்தங்களைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும், ரிஷிகளைப் பற்றியும் அதிகங் கூறப்படுகிறது.

தட்சிண ஸ்காந்தத்தில் முருகன் வரலாறு விரிவாகக் கூறப்படுகிறது. தென்னாட்டில் வழங்கி வந்த ஸ்காந்தமொன்று இப்பொழுது சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலைப் பற்றிக் கந்தபுராண அமைப்பு, கதைப் போக்கு முதலியவற்றை ஆராய்ந்தபின் சந்திப்போம்.


வீடு, வியாபாரநிலையம்
வாங்க விற்க

**Kenga Kumaraswamy**
***Sales Representative***
**Cell: 416-318-0171**
*kengak@hotmail.com*



**HomeLife / Future Realty Inc.**, Brokerage*
7 Eastvale Drive, Suit #205
Markham, ON. L3S 4N8
**Bus: 905-201-9977** **Fax: 905-201-9229**
*Independently owned and operated

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

- ✸ இன்றைய உலகத்தில் வாழும் மனிதனின் ஆசை கடலையும் வானையும் தனக்கு உரிமையாக்கி ஆதிக்கம் செலுத்தும் அளவுக்கு வளர்ந்து விட்டது.

- ✸ அழியும் பொருளுக்காக அலைவதிலும் பார்க்க அழியாப் பொருளை நாடினால் அதனால் பயன் அதிகம்.

- ✸ செல்வம், செல்வோம் செல்வோம் எனறு தினமும் ஒருவனை விட்டு இன்னொருவனிடம் சென்று கொண்டே யிருக்கின்றது. செல்வமும் நிலையில்லாதது. அதை உடையவனும் நிலையில்லாதவன்.

- ✸ எனது தந்தையாருடைய தந்தையார் காலத்தில் பால் பணத்திற்கு விற்பது பாவம் என்று கருதப்பட்டது. தந்தையாருடைய காலத்திலே பணத்திற்கு பால் விற்பது பாவமில்லை என்று கருதப்பட்டது. இன்று தண்ணீர் கலவாமல் பால் விற்பது பாவம் என்றளவிற்கு மக்கள் மனது மாறி உள்ளதைப் பார்க்கின்றோம்.

- ✸ உண்மை நெறியைத்தான் சன்மார்க்கம் என்று சொல்லுவார்கள். மனித சமூகத்தை ஒன்றாக மதிக்காமல் பேதம் பாராட்டுவோரை சன்மார்க்க விரோதிகள் துன் மார்க்கர் என்று கூட சொல்லி விடலாம்.

- ✸ சுயநலத்தை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்களே மனித பேதங்களை வளர்க்கின்றார்கள். சுயநலம் என்று குறிப்பிடுவது பட்டம், பதவி, புகழ், அரசியல் எதன் மூலமாக வேனும் தனது ஆசைகளை திருப்தி செய்து கொள்ளும் ஒன்று. சாதி பேதம், சமய பேதம், மொழி பேதம், தேச பேதம், இன பேதம் எல்லாம் சுயநலமிகளின் உள்ளத்திலேயேதான் தாண்டவமாடும்.

- ✸ ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமந்திரம் உலகம் முழுவதும் பரவினால் போதும் உலகில் இன்றுள்ள

வெறுப்புணர்ச்சிகள் அனைத்தும் மறைந்து போய்விடும்.

- ✹ மனத்தினால் உயர்ந்தவர்களே மனிதர்கள்.

- ✹ உலகிலுள்ள எந்தப் பிரச்சனையை எடுத்தாலும் அவற்றிற்கு மூல காரணம் சுய நலமும், அன்பு இல்லாமையும் என்றே கூறிவிடலாம்.

- ✹ உலகிலே ஒற்றுமை நிலவ வேண்டும். மனிதர்களுக்குள் இருக்கும் வெறுப்பும் பிரிவும் ஒழிந்து போக வேண்டும். எல்லா மக்களும் அன்புடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும். மதத்தால், மொழியால், இனத்தால் நாட்டில் மனிதர்கள் பிரிந்து நிற்கும் நிலை மாற வேண்டும்.

- ✹ அன்புக்குச் சொல்லால் உருவம் கொடுத்தால் அது திருவாசகம். தேனில் எப்பகுதியைச் சுவைத்தாலும் அது தேன்தான். அதே போல திருவாசகத்தில் எப் பகுதியைச் சுவைத்தாலும் அன்பின் உருக்கத்தை அங்கே காணலாம்.

- ✹ இறைவன் அன்பு மயமானவர். ஆனந்த மயமானவர். மணிவாசகப் பெருமான் சொல்லச் சொல்ல கிழப்பிராமண உருவத்தில் சென்று இறைவன் எழுதிய திருவாசகமும் அன்பு மயமானது, ஆனந்த மயமானது. இதனாலேதான் அன்பு இல்லாதவர்களும் திருவாசகத்தை ஓதினால் அன்பின் உருவமாக மாறி விடுகின்றார்கள்

- ✹ திருவாசகத்தை தமது தினசரி பாராயணமாகக் கொண்டவர்கள் அன்பின் உருவத்திற்கு இலக்கியமாகவே மாறிவிடுகின்றார்கள்.

- ✹ இராமலிங்க வள்ளலார் திருவாசகத்தை ஓதி ஓதி அன்புருவானார். திருவாசகம் ஊன் கலந்து, உயிர் கலந்து உவட்டாது இனித்தது என்று வள்ளலார் கூறினார். மணிவாசகர் எவ்வாறு இறைவனோடு இரண்டறக் கலந்தாரோ அதேபோல வள்ளலாரும் இறைவனோடு இரண்டறக் கலந்த செய்தியை நாம் அவர்களின் வரலாற்றில் இருந்து அறிகினறோம்.

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க



**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***



**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc., Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# APPLEMORE
# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

## Ontario Emission Inspection



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்
குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**
**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

**அதிவேக துரித பணமாற்றுச் சேவை**

**WESTERN UNION**
**MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

**VIVEKA** *Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**
**TEL: 416-807-7468**
**416-410-6401**